1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS JAFFNA.
Telephone: No. 100.

# சத்தியவேதபாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு அனி மாதம் 3-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 21-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### றீகல்தியேற்றரில்-குஒ வாடிஸ்

யாழ்ப்பாணம், றீகல்தியேற்றரிலே இம்மாதம் 5-ந்திகதியாகிய வருகிற சனிக்கிழமைமுதல் "குஒ வாடிஸ்" அதாவது, "எங்கே போகிறீர்" என்ற அலங்காரமான ரெக்னிகலர் கொண்ட ஆங்கிலம்பேசும் படக்காட்சி காண்பிக்கப்பட விருக்கிறது. அஞ்ஞான இருள் அடர்ந்திருந்த உலகில் கிறீஸ்துவேதத்தின் உற்பத்தியையும், அதன் ஆரம்பகால வரலாற்றையும் இது சித்திரித்துக்காட்டுவதாகும். றோமை நகரிலே கொடுங்கோலனும், வேத விரோதியுமான நீரோமன்னனின் விபரீதவாழ்க்கையையும், அவன் நடத்திய குரூரவேதகலாபனையையும், சம்பேதுரு வானவர் பேர்போன அப்பியஷ பாதையால் தப்பியோடும்வேளை யேசுபெருமானை முகமுகமாகத் தரிசிப்பதையும், கிறீஸ்தவர்கள் சிலுவையில் அறைந்தும், தீயிலிட்டும் துன்புறுத்தப்படுவதையும், சிங்கங்களின்முன் எறியப்படுவதையும், றோமாபுரி சுவாலித்தெரிவதையும், பிறவற்றையும் இதிலே கண்டுகொள்ளலாம். பூர்வீகசரித்திரசம்பந்தமான றோமாபுரியை மூலாதாரமாகக் கொண்டு பன்னிருவருடங்களாய் இப்படம் தயாரிக்கப்பட்டது. அதனால் கிறீஸ்தவமக்களெல்லாரும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இதனை ஓர்தாம் பார்த்து மகிழ்வார்களாக.

### மந்திரியாரும் நெல்விளைவும்

வியன்வலயாவாவிலே சென்றவெள்ளிக்கிழமை நடைபெற்ற போட்டியொன்றின் முடிவில் உணவு-கமத்தொழில் மந்திரியார் பேசியபோது: "நமக்குத் தேவைப்படும் அரிசியை இங்குதானே உற்பத்தி செய்துகொள்வது சாதிக்க முடியாத ஓர்காரியமாகச் சிலவருடங்களின்முன் தோற்றியது; ஆனால், இப்போதோ அப்படியன்று" எனக் கூறலாயினர். 1954-ம் ஆண்டுக்கான அரிசி இறக்குமதி, பர்மாவிலிருந்து 2 லட்சம் தொன்னும், சீனுவிலிருந்து 2 லட்சத்து 66 ஆயிரம் தொன்னுமாக மொத்தமாய் 4 லட்சத்து 66 ஆயிரம் தொன்னாகும்; ஆனால், தற்போது இலங்கையிலே நெல்விளைவு வெகுவாக அதிகரித்திருப்பதாலே அடுத்த வருடம் அரிசியின் இறக்குமதி ஒருலட்சம்தொன்னால் குறைக்கப்பட விருக்கிறது; இவ்வருடம் கமக்காரரும், மில்காரரும் உத்தரவாதவிலைத்திட்டப்படி இலங்கையிலேவிளைவித்த 35,000 தொன் அரிசியைக் கொள்வனவிற்கு உதவியிருக்கிறார்கள்; இத்தொகை சென்றவருடத்திலும் எட்டுமடங்கு வரையில் கூடியதாகுமென்றும் மந்திரியார் தெரிவித்திருக்கின்றார்.

### வடிகட்டிய சாராயவிலை

இருமுறைவடிகட்டிய சாராயம் இந்தஆனிமாதமுதல் போத்தல் ஒன்றின்விலை 12ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இதுவரை இந்தச்சாராயம் போத்தல்ஒன்று 20ரூபாவாக விலை குறிக்கப்பட்டிருந்தது. இந்தவிலையேற்றங்காரணமாக அதிகமாக எவரும் இதனை விரும்பிவாங்கவில்லை அதனால் இதன்விலையைக்குறைக்க அரசாங்கம் தீர்மானிக்கலாயிற்று.

### யாழ்ப்பாணக்காட்சிகளும் வேண்டும்

இலங்கையிலே சமீபத்தில் பலபுதிய தபால்முத்திரைகள் பாவனைக்கு வரலாயின; ஆனால், இந்தமுத்திரைகளிலே வடமாகாணத்திலுள்ள காட்சிகள் எதுவும் இடம்பெறுதிருப்பது தமிழ் மக்களுக்கு அதிகம் கவலைக்கிடமாய் இருக்கிறது; அதனால் இனிமேல் புதிதாகப்பாவனைக்குவரும் தபால்முத்திரைகளில் யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரம், கோயிற்கோபுரங்கள், பனைமரம், மற்றுஞ்சிறப்புவாய்ந்த காட்சிகளை அச்சிடும்படி தென்மராட்சிக் கிராமமுன்னேற்ற சங்கங்களின் சமாசத்தலைவர் திரு. வி. எஸ். கார்த்திகேசு அவர்கள் தபால்-தந்தி மந்திரியாரைக் கேட்டிருக்கின்றார்.

### அதிகரித்துவரும் தற்கொலைகள்

இலங்கையிலே தற்கொலைகள் வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டு வருவதாகப் பொலிஸ் இன்ஸ்பெக்றர் ஜெனறல் 1953-ம் ஆண்டுக்கான தமது நிர்வாகஅறிக்கையிலே வெளியிட்டிருக்கின்றார். 1951-ம்ஆண்டிலே 160 பேரும், 1952-ம் ஆண்டிலே 264 பேரும் தற்கொலைசெய்திருக்க, சென்ற 1953-ம் ஆண்டிலோ 427பேர் தங்கள் உயிருக்குத் தாங்களே உலைவைத்திருக்கின்றார்கள். சென்றவருடம் 179 பேர் கழுத்திலே சுருக்கிட்டுத் தூங்கியும், 62 பேர் நீரில்மூழ்கியும், 104 பேர் அசெற்றிக் அசிட் திராவகங்குடித்தும் தங்கள்உயிரை மாய்த்திருக்கின்றனர். சென்றவருடத்திலே முதன்முறையாக 8 வயதுக்கும், 14 வயதுக்குமிடைப்பட்ட ஆறுபிள்ளைகளும் தற்கொலை செய்திருக்கின்றார்கள்.

### கூட்டுறவுச்சங்கவேண்டுகோள்

பிறநாடுகளிலிருந்து இலங்கையில் இறக்குமதியாகும் சிகறெற்புகையிலை, பீடி ஆதியவற்றிற்குத் தடைவிதித்து, உள்நாட்டிலே சிகறெற்புகையிலைச் செய்கைமுயற்சியை விருத்தியாக்க வேண்டுமென்று நீர்வேலிக் கூட்டுறவுச் சிகறெற்புகையிலைச் செய்கையாளர்சங்கம் உணவு-கமத்தொழில் மந்திரியார் திரு ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களுக்கு மனுஒன்று சமர்ப்பித்திருக்கிறது. தற்போது நீர்வேலியில் 55 ஏக்கர் விஸ்தீரணமான தோட்டங்களிலே அறுவடைசெய்யப்படும் சிகறெற்புகையிலை முழுவதையும் இலங்கைப் புகையிலைக்கம்பெனிஒன்று கொள்வனவு செய்துவருகின்றது.

### வெங்காயத்தின் உத்தரவாதவிலை

வெங்காயத்தின் உத்தரவாத விலைத் திட்டத்தை வருகிற மார்கழியோடு நீக்கிவிட அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதற்குக்காரணம் இலங்கையின் தேவைக்குப்போதிய வெங்காயம் விசேஷமாய் வடமாகாணத்தில் உற்பத்திசெய்யப்பட்டு வருவதேயாகும். தற்போது வெங்காயத்துக்கு அரசினரின் உத்தரவாதவிலை, முதற்தரம் ருத்தல் 25 சதம். இரண்டாவது தரம் 20 சதம். வருடம்ஒன்றுக்கு இலங்கைக்குத் தேவைப்படும் வெங்காயம் 25,000 தொன் வரையிலாகும். 1952-ம் ஆண்டிலே இலங்கையில் செய்கைபண்ணப்பட்ட வெங்காயம் 15,000 தொன். 1953-ம் ஆண்டில் 21,500 தொன்.

### மகாஞானஒடுக்க முடிவு

நமதுஆசனக்கோவிலிலே இருவாரங்களாகப் போதிக்கப்பட்டுவந்த ஞானஒடுக்கமும் சென்ற ஞாயிற்றுக்கிழமை முடிவாயிற்று. அதுநடைபெற்றபதினைந்துதினங்களிலும் எங்கும் பக்தியூட்சிக்குரியசூழல் காணப்பட்டது. ஞானஒடுக்க போதகர்களும், மரியாயின்சேனையாரும் தினமும் வீடுகள்தோறும்சென்று எல்லோரையும் அதில்கலந்துகொள்ளுமாறு ஞானஉற்சாகம் அளித்துவந்தார்கள். ஈற்றில் சென்றஞாயிற்றுக்கிழமை வணக்கமாசமுடிவுவிழாச் சுற்றுப்பிரகாரமுடிவிலே விசாரணைப்பங்கு முழுவதும் தேவதாயாரின் மாசற்றஇருதயத்துக்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்பெற்றுப் பாப்பாண்டவரின் அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. அதன்மேல் வண. கட்டளைக்குரவர் ஞானஒடுக்க போதகர்களுக்கு நன்றியுரை கூறிநின்றார்.

### திருடர்களின் சமர்த்து

கேகாலையைச்சேர்ந்த நாரம்பிட்டியிலே ஏ. எச். ஏபிரகாம்என்ற ஆயுள்வேத வைத்தியர்ஒருவர் இருக்கின்றார். சென்ற 26-ந் திகதி புதன்கிழமைஇரவு நடுச்சாமவேளை எட்டுப்பேர்சேர்ந்து அவருடையவீட்டுக்குச்சென்று கதவைத்தட்டித் தங்களுள்ஒருவர் நஞ்சூட்டப்பட்டு வருந்துவதாலே அன்னருக்குச் சிகிச்சைசெய்யும்படியாக அவரைக் கேட்டுக்கொண்டார்கள். அவரும் கதவைத்திறந்து அவர்களை உள்ளேவரவிட்டு நோய்கண்டவருக்குச் சிலமருந்துகள் கொடுத்துக்கொண்டிருக்கையில் அந்த மாரீசநோயாளியும், ஏனையவர்களும் அவரையும், அவரதுமனைவியையும், மூன்றுபிள்ளைகளையும் கட்டிவிட்டுக் காசாக 1,000 ரூபாவையும், 2,500 ரூபா பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துக் கொண்டு ஓர்வானில்ஏறித் தப்பிவிட்டார்கள். இத்திருட்டுவிஷயமாய்ச் சந்தேகத்தின்பேரில் நால்வர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்கள் சென்றதாகச் சொல்லப்படும் வானும், ஒருகாரும் பிடிக்கப்பட்டிருக்கின்றன. களவுபோன ஒரு கைக்கடிகாரமும், வேறுசிலபொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

### ஒருரூபா மாத்திரமே

அனுராசபுரத்திலே கொன்வீவாஎனுமிடத்துப் புத்தகோவிலைச்சேர்ந்த பியரத்தின தெரோஎனும் புத்தகுருவை விக்றர் பெரேரு, எச் ஏ. ஜேம்ஸ், வில்பேட் பெரேரு, பீற்றர் சில்வா, எஸ் ஏ. அல்பேட், அல்பன் சில்வா எனும் ஆறுவர்சேர்ந்து கொலைசெய்தார்களெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ளவழக்கு அனுராசபுரக் கோட்டிலே விசாரணைசெய்யப்பட்டு வருகிறது. கொலையுண்ட புத்தகுரு ஓர்செல்வந்தரென அப்பகுதியிலுள்ள சனங்கள் எண்ணிவந்தார்களென்றும், அதனால் அவரிடமிருந்த பணத்தைக் கொள்ளையடிக்குமாறு எதிரிகள் ஆறுபேரும் சேர்ந்து அந்தப்புத்தகுருவைக் கொலைசெய்துவிட்டுப் பின்னர் தேடிப்பார்த்தபோது ஒரேயொரு ரூபாமாத்திரமே இருக்கக் கண்டெடுத்தார்களென்றும் விசாரணையின்போது தெரியவந்திற்று.

### வணக்கமாத முடிவுவிழா

பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே வணக்கமாத முடிவுவிழா சென்ற 30-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை பக்திச்சிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. அன்று காலை 7 மணிக்கு ஆசனக்கோவிற் கட்டளைக்குரவர் வண. பி. ரி. ஜேம்ஸ் சுவாமியவர்களால் பெரியபாடற்பூசை நிறைவேறியது. சாயந்தரம் சுவாமியவர்களாலேயே வேஸ்பர்பாடிமுடிந்ததும் தேவதாயாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்நடந்து திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் வணக்கமாத முடிவுவிழா பூர்த்தியாயிற்று. வழமைபோலப் பாப்பாசரின் மைற்பட்டவர்த்தனரான சவிரிமுத்து சந்திரசேகரமுதலியாரின் சுற்றத்தவர்களது உபயத்திலே திரு. விக்றர் செருபிம் அவர்கள் முன்னின்று விழாவைச் சிறப்பாக நடத்திமுடித்தனர்.

### கடலில்மூழ்கிய தோணி

மன்னூரிலே ஓர்மீன்முதலாளியான ஜீரிஸ்அப்புஎன்பவர் கருவாடு ஏற்றிச் செல்வதற்காகத் தனதுதோணியிலே வேறுநால்வருடன் அங்கிருந்து 30 மைல்தூரத்திலுள்ள இரணைதீவுக்கு வந்தார். பின்னர் இரண்டுதொன்கருவாடு ஏற்றிக்கொண்டு அந்தச் சிறிய தோணியிலே அவரும், தோணிக்காரர் நால்வரும் மன்னூரைநோக்கிப் புறப்பட்டு ஒன்பதுமைல்தூரஞ் சென்றதும் பெருங்காற்று வீசியதாலே தண்ணீர் உட்சென்று தோணி குமுளமுனையிலிருந்து ஒருமைல்தூரத்தில் கடலில் மூழ்கியது. அதிலேசென்ற ஐவரிலும் மூவர் ஒருவாறுநீந்திச்சென்று உயிர் தப்பிக்கொள்ள ஜீரிஸ்அப்புவும், ஜேக்கப்என்ற தோணிக்காரனும் கடலில மூழ்கினர்கள். பிந்த ஜீரிஸ்அப்புவின் பிரேதம சென்றபுதன்கிழமை நாச்சிக்குடாவிலே கரையடைந்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. மற்றவரின் பிரேதம் இன்னும் கண்டறியப்படவில்லை.

### கலியாணப்பதிவற்ற ஆசிரியர்கள்

தங்கள் கலியாணங்கள் பதிவுசெய்யப்படாதவர்களை இனிமேல் ஆசிரியர்களாக அமர்த்துவதில்லையென்று கல்விப்பகுதி தீர்மானித்திருக்கிறது. அதனால் இப்படியானவர்களை ஆசிரியர்களாக அமர்த்துவதைத் தடுக்கும்புதிய ஒழுங்குகள் கல்விச்சட்டத்தில் சேர்க்கப்படவிருக்கின்றன. சென்றகாலத்திலே ஆசிரியர்களின் தவறுனஒழுக்கம் பற்றிய முறையீடுகள் விசாரணைசெய்யப்பட்டபோது, அவர்கள் தேசவழமையைமேற்கொண்டு தாங்கள் கலியாணஞ்செய்துகொண்டதாகக் கூறினார்கள். அத்தகையகலியாணங்கள் சட்டமூலம் அங்கீகரிக்கப்பட்டனவாகலின் கல்விப்பகுதி அவர்கள்மட்டிலே எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள முடியாமலிருந்தது. ஆனால், வருகாலத்திலே தேசவழமையைமேற்கொண்டு நடைபெறும கலியாணங்களை அங்கீகரிப்பதில்லையென்று தீர்மானமாயிருக்கிறது. இதற்குக் காரணம் பாடசாலைகளிலே சன்மார்க்கத்தின் தரத்தை உயர்த்துவதேயாகும். புதிய ஒழுங்குகளைக் கல்விமந்திரியார் சமீபத்திலே பிரதிநிதிகள்சபையில் கொண்டுவரவிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வத்திக்கான்

[டி. எஸ். ஞானசாமி]

வத்திக்கான்என்பது நமதுபரிசுத்த தந்தை பாப்பரசரின்உறைவிடம். நமது மெய்மறையின் தலைநகரம்என்றாலே போதும், நினைவிலேதோன்றும் ஓர் இன்பப்பற்று. இத்தகையஇன்பப்பற்றைத் தோற்றுவிக்கும் வத்திக்கானைச் சுற்றிப்பார்த்தும், படித்தும், கேட்டும் அறிந்தவற்றைச் சுருங்கக்கூறுகின்றேன்.

வத்திக்கான் ரோமைநகரின் ஒரு பாகம். ரோமைநகர், வடக்குத்தெற்காகஓடும் தைபர்நதிக்கரையின் இருமருங்கிலும் ஏழுகுன்றுகளின்மீது கட்டப்பட்டுள்ளது. குன்றுகள்என்றால் சாதாரணமாக நாம்எண்ணுவதுபோல் பெருங்கற்பாறைகள் அல்ல. பெரிய விசாலமானமேடுகள். அம மேடுகள் எங்கேமுடிகின்றன, எங்கேதொடங்குகின்றன என்பதை நகர்வழியாகச் செல்லுகையில் உணரமுடியாது. வத்திக்கான்நகர், மேற்கூறியநதியின் வலதுபுறத்தில், அவ்வேழுகுன்றுகளில் ஒன்றாகிய பொன் குன்றின்மீது (Mons Aureus) ரோமையின்மேற்குப்பகுதியாக அமைந்திருக்கின்றது.

வத்திக்கான் என்றபெயர் ஜோசியம் என்றுபொருள்படும் 'வாத்திச்சீனியும்' (Vaticinium)என்ற சொல்லிலிருந்து இதுபிறந்ததாகக்கேள்வி. பண்டைக்கால அஞ்ஞானரோமையர்கள் அங்குஅதிகமாக ஜோசியம் பார்த்தார்கள்போலும். முதல்கிறீஸ்தவர்களிற்பலர் (உதாரணமாக, ஆர்ச். இராயப்பர்) மெய்மறைக்குச் சான்றுபகர்ந்து, உயிர் துறந்து நிறைபுகழும், நித்தியமுடியும் பெற்ற இடம்இது. அவர்களின் புனிதஇரத்தம், கத்தோலிக்கதிருமறையின் இன்றைய மத்தியதலமாகிய வத்திக்கானுக்கு வித்தாகஇருந்திருக்கின்றது. அக்காலஜோசியர்கள் இதை முன்கூடியேஉணர்ந்து, வேதகலகத் தலைவர்களுக்கு உரைத்திருக்கலாமே: "ஐயன்மீர்! உங்களுக்கும், எங்களுக்கும் கெட்டகாலம் பிறக்கப்போகின்றது; ஆதலால் மெய்மறையை எதிர்த்து வீண்முயற்சிசெய்யாது, அதற்குத்தலைவணங்கி, அதன் அருளொளிபெற்று, நல்வாழ்வு வாழ்வோம்" என்று சொல்லியிருக்கலாமே. ஏன் சொல்லவில்லை? அவர்களதுஜோசியம் அவ்வளவுதூரம் போகவில்லையாக்கும்.

14-ம்நூற்றாண்டின் ஆரம்பம்வரை பாப்பரசர்கள் தங்கியிருந்தஇடம் வத்திக்கான்அல்ல. ரோமாபுரியின் வேறொருபகுதியிலுள்ள லத்தறன் அரண்மனை. 1309-ம்ஆண்டுமுதல் 1377-ம்ஆண்டுவரை அவர்கள் பிரான்ஸ் தேசத்திலுள்ள அவிஞ்ஞோன்நகரில் தங்கியிருந்தார்கள். அங்கிருந்து1377-ம் ஆண்டு ரோமைக்குத்திரும்பிய 11-ம் கிறகோரியார்என்ற பாப்பாண்டவர் வத்திக்கானைத் தமதுஇருப்பிடமாகத் தெரிந்துகொண்டார். அந்நாள்முதல் இந்நாள்வரை வத்திக்கான்நகரம் பாப்பரசர்களின் உறைவிடமாய்விளங்கிக் கலையிலும், அழகிலும் வளர்ந்துவந்துள்ளது.

இன்றைய வத்திக்கான்இராச்சியம் எவ்வாறுஉருவாயிற்று என்பதுபற்றி முதலில் ஒருசில சரித்திரக்குறிப்புகளைத் தருவதுநலமாகும். கொன்ஸ்தந்தின்சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து (கி. பி. 313) பாப்பரசர்களின் செல்வாக்குப் பெருகத்தொடங்கிற்று. கி. பி. 572-ம்ஆண்டு 2-வதுமுடியப்பர் காலத்திலே அவர்களின்லௌகீக ஆட்சி ஆரம்பமாயிற்று. எல்லையில் நாளுக்குநாள் அதுவளர்ந்துவந்தது. கி.பி.728-ம் ஆண்டு ரோமாபுரிமுழுவதும் அவர்களின் ஆட்சிக்குட்பட்டது. ஒருகாலத்தில் இத்தாலியின்பெரும்பகுதியைப் பாப்பரசர்கள் முடிமன்னராயிருந்து ஆண்டுவந்தார்கள். அந்தக்காலம்போய், 19-ம்நூற்றாண்டில் அவர்கள் தமதுநில ஆட்சி முழுவதையுமே இழக்கநேர்ந்தது. 1870-ம்ஆண்டு இத்தாலியபடைகள் ரோமாபுரியையும், அதன்சுற்றுப்புறங்களையும் கைப்பற்றிக்கொண்டன. 1870 முதல் 1929 வரை பாப்பரசர்கள் வெளியேசெல்ல முடியாது, வத்திக்கானுக்குள்ளேயேசிறையிலிருப்பதுபோல் அடங்கிவாழ்ந்து வந்தார்கள். 1929-ம் ஆண்டு மாசி 11-ந்திகதியன்று இத்தாலிய அரசாங்கத்திற்கும், திருச்சபைக்குமிடையே ஏற்பட்ட சமாதானஉடன்படிக்கைப்படி, வத்திக்கான் பூரண சுதந்திரம் பெற்றது. பாப்பரசர் சுயாட்சிபெற்ற ஓர்அரசர் என்பதை இத்தாலியஅரசாங்கம் ஏற்றுக்கொண்டது. இன்று பாப்பரசரின் ஆளுகைக்குட்பட்டிருக்கும் பிரதேசங்கள் வத்திக்கான்நகரமும், ரோமாபுரியிலும், வேறிடங்களிலும் ஆங்காங்கு ஒருசில இடங்களும், கட்டடங்களுமே(Extra-Territorial). உலகிலேயே மிகச்சிறிய இராச்சியம் வத்திக்கான்தான்.

அதன்விஸ்தீரணம் 109ஏக்கர்தான். பலநாடுகளைச்சேர்ந்த சுமார் 1,000 பேர் அங்குவசிக்கின்றனர். இவர்களுள் 'வத்திக்கான் குடிமக்கள்'என்று உரிமைபெற்றவர்கள் 700 பேர்தான். இவ்வுரிமை பிறப்பால் கிட்டுவதல்ல, பாப்பரசரால் தரப்படுவது. கருதினல்மார்யாவரும் வத்திக்கானின் பிரசாவுரிமைபெற்றவர்கள். வத்திக்கான் வாசிகளுக்கு வரியுமில்லை, வாடகையுமில்லை.

(தொடரும்)

## நாளு சங்கதிகள்

—செக்கோசிலவாகியநாட்டின் சந்நியாசஆச்சிரம நூல்நிலையங்களிலிருந்து கம்யூனிஸ்தர்கள் காலந்தோறும்சூறையாடிய சுமார் மூன்றுலட்சம் புத்தகங்களை அந்நாட்டில்அருந்தலாயிருக்கும் பவுண், டலர், சுவிஸ்பிராங்நாணயங்களைச் சேகரிப்பதற்காகப் பிறநாடுகளுக்கு விற்றுவருவதாய்ச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தப் புத்தகங்கள் செக்கோசிலவாகியாவுக்கு அத்துணைகாத்திரமானவைகள் அல்லவென்று கம்யூனிஸ்தஅதிகாரிஒருவர் கூறுகின்றாராம்.

— சமீபத்திலே ஓர்பெருந்தொகையான ஜேர்மன்யாத்திரிகர்கள் மரியாயின்வருடத்தைமுன்னிட்டு ரோமாபுரி சென்று சம்பேதுருவானவர்மகாலய சதுக்கத்திலே மரியாய்என்பதன் அறிகுறியாக 'எம்'வடிவமாகநின்றபோது பரிசுத்தபாப்பரசர் வத்திக்கான்அரண்மனை மேல்மாடியிலுள்ள தமதுபிரத்தியேக அறையின் சன்னல்முன்பாகக் காட்சியளித்து, அவர்கள்பாடிய கீதங்களை ஐந்துநிமிஷம்வரை கேட்டுநின்றபின் அவர்களுக்குத் தமதுஆசீர்வாதம் வழங்கலாயினர்.

— நிகழும் ஆனிமாதம் 30-ந் திகதி புதன்கிழமை ஏற்படவிருக்கும் பூரண சூரியகிரகணத்தின்போது நடத்தவிருக்கும் ஆராய்ச்சியின்விளைவாக அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்குமிடையிலுள்ளதூரத்தைச் சரிவரநிர்ணயிக்க முடியுமென்று அமெரிக்கவிஞ்ஞானிகள் கருதுகின்றார்கள். இந்தச் சூரியகிரகணத்தைத் தப்பவிட்டால் இந்த மாதிரி வசதியானகிரகணம் இனி 2151-ம் ஆண்டில்தான் ஏற்படுமாம்.

— எத்தியோப்பியாவிற் போய்க் குடியேறும் இந்தியர்களுக்கு அத்தேச அரசாங்கம் இலவசமாக நிலங்களும், ஏனையவசதிகளும் அளித்துவருகின்றது. இதுவரை எட்டுஇந்திய கமக்காரக்குடும்பங்கள் அங்குபோய்க் குடியேறியுள்ளன. ஒவ்வோர்குடும்பத்துக்கும் 96 ஏக்கர்வீதம் இலவசமாக நிலம்உதவப்பட்டிருக்கின்றது. அங்கே கல்வித்துறையிலும், சட்டத்துறையிலும் அநேகஇந்தியர்கள் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

— 38,000 தொன்நிறைகொண்ட பெனிங்ரன்என்ற அமெரிக்க பாரிய விமானமேற்றி[illegible] தென்[illegible] கிழமைஏற்பட்[illegible] தீப்பக்கக்காரணமாகத் 92பேர் சிவமோசம் அடைந்தார்களென்றும், காயமடைந்த 201 பேரிலும் 40 பேர் அபாயகரமானநிலைமையில் இருப்பதாகவும் செய்திகிடைத்திருக்கிறது. சமாதானகாலத்தில்ஏற்பட்ட மிகமோசமான அமெரிக்ககடற்படைவிபத்து இதுவாகும்.

— பிரித்தானியிலும், அமெரிக்கஐக்கியதேசத்திலும் சென்றவருடத்திலே தேநீர்ப்பாவனை முன்னிலும் அதிகரித்திருக்கிறது. பிரித்தானியிலே சென்றவருடம் ஒருஆளுக்குச் சராசரிவீதமாய் ஒன்பதரைறாத்தல்தேயிலை செலவாகியிருக்கிறது. அதாவது அங்கே முந்தியவருடத்திலும் நூற்றுக்குப் 11 விகிதம் தேநீர்ப்பாவனை அதிகரித்துள்ளது. அமெரிக்கரோ சென்றவருடத்திலே [illegible] 22 விகிதம் அதிகமானதேயிலை பாவித்திருக்கிறார்கள்.

## தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

### களிகூர்ந்தகாரணிக்கம்

### 5-ம் காரணிக்கம்—1-ம் பிரியதத்தம்

### 41. திருயாத்திரை

காணிக்கைத் திருச்சடங்கு முடிந்தபின்னரும் திருக்குடும்பம் ஆலயதரிசனம் செய்தற்பொருட்டுச் சிலநாட்களுக்கு ஜெருசலேமிலே தங்கியிருக்கத் தீர்மானித்தது. அப்பொழுது வானவன்ஒருவன் சூசையப்பருக்குத் தரிசனையாகி: ஏரோதன் தேவகுழந்தையைக்கொல்லத் தேடுகிறான்; ஆதலால், அதனையும்எடுத்துக்கொண்டு எகிப்துநாட்டுக்குச் செல்லும்படியாகத் தேவகட்டளையைத் தெரிவித்து நின்றனன். அதனால்அவர்கள் எகிப்துதேசஞ்சென்று அங்கே ஏழுவருடகாலம் சீவித்துவந்தார்கள்.

ஏழாம்வருடமுடிவில் மீண்டும் தேவதூதன்தோன்றி: "மாதவனே! திருப்பாலகனைக் கொல்லஎண்ணிய ஏரோதன் இறந்துவிட்டான். அதனால்நீங்கள் உங்கள்சொந்தவூர் செல்லலாம்" என்று சொல்லிமறைந்தனன். அதன்படியே திருக்குடும்பம் மீண்டும் நசரேத்தூர் போய்ச்சேர்ந்தது.

மாமிசஐக்கிய பரமஇரகசியத்தின் தலமாகிய நசரேத்திலேயே தேவசுதன் வளரவேண்டுமென்பது தேவ ஏற்பாடுபோலும்! நசரேயனென அழைக்கப்படுவாரென்று தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்டவாக்கியமும் இவ்விதமாக நிறைவேறலாயிற்று.

நசரேத்திலேயே பாலகயேசுவின் மறைந்தசீவியம் ஆரம்பமானது எனலாம். அவரும் சாதாரணசிறுவனைப் போலத் தமதுபெற்றோருக்குக் கீழ்ப்படிந்துவந்தார். அயலகத்தாரும் அவரைச் சூசையின்மகனாகவே கருதிவந்தனர்.

திவ்வியயேசு பராயத்திலே வளர்ந்ததுபோலத் தேவஞானத்திலும் வளர்ந்துவரலானார். "பிள்ளைவளர்ந்து ஞானத்தால் நிறைந்து பலப்பட்டுவந்தது. சருவேசுரனுடைய அருளும் அவரிடத்தில் தங்கிற்று" எனச் சொல்லப்படுகிறது. அப்பொழுது அவருக்கு வயது பன்னிரண்டு.

பன்னிரண்டுவயதோடு யூதச்சிறுவன்ஒருவனது பாலப்பருவமும் முடிவடைகிறது எனலாம். அதன்பின்னர் வாலிபனாகவே அவன்கருதப்படுவான். அதனால் மோசேசின் வேதப்பிரமாணங்களைஎல்லாம் அவன் நுணுக்கமாக அநுசரிக்கவேண்டியவன்.

அப்பிரமாணங்களில் முக்கியமானது திருயாத்திரையாகும். வருடாவருடம் ஜெருசலேமில் நடைபெறும் மூன்று பண்டிகைகளின்போதும் ஆடவர்கள் சமூகமளிக்க வேண்டுமென்பது வேதப்பிரமாணம்.

ஆடவர்களுக்குக் கட்டளையாக இருந்தபோதிலும் பெண்களும் திருயாத்திரையில் பங்குபற்றுவர். தேவாலயத்தைத் தரிசிப்பது யூதர்களுக்குப் பேரானந்தம்தருவதோர் செயலாகும். சர்வேசுரன் தமக்குச்செய்தருளிய உபகாரங்களுக்காக நன்றிசெலுத்துவதிலே அவர்களுக்கு அடங்காஆவல். அவர்கள் திருயாத்திரைசெய்யும் பண்டிகைள்மூன்றும் ஞாபககொண்டாட்டங்களாகவே இருந்தன. எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து மீண்டதன் ஞாபகமாக அவர்கள் பாஸ்குப்பண்டிகையைக் கொண்டாடுவார்கள். பெந்தகோஸ்த் பண்டிகையோ சீனாய்மலையில் பத்துக்கற்பனை பெற்றுக்கொண்டதின் ஞாபகவிழாவாகும். மற்றக் கூடாரப்பண்டிகை வனாந்தரத்தே கூடாரங்களில் வசித்ததை நினைப்பூட்டுவதாகும்.

பன்னிரண்டுவயதுநிரம்பிப் பாலப்பருவம் கழியப்பெற்ற திவ்வியயேசுவும் அவ்வருடம் பாஸ்காப் பண்டிகையின் பொருட்டு ஜெருசலேமுக்குத் திருயாத்திரைசெய்யத் திருவுளங்கொண்டார்.

"அருளின்முற்றிய பன்னிரு
வயதுளன் அம்பொன்
பொருளின்முற்றிய புரிசை
சூழ்எருசல நகரில்
தெருளின்முற்றிய திருமணிக்
கோயில்தான் செல்ல
இருளின்முற்றிய இரவறக்
கதிரென எழுந்தான்"

இருள் அறவேஒழிய எழுந்தருளும் சூரியனைப்போல ஜெருசலேமாநகரிடத்தேயுள்ள அழகியதேவாலயத்தை நோக்கி எழுந்தருளுகின்றார். அவ்வேளையிலே...........

"பூவும்வாசமும் பொதுளிய
தாமமு மணியும்
காவுநீழலும் காயமும்
உயிரும் போல்......"

மலரோடுமணமும், மணியோடுஒளியும், சோலையொடுநிழலும், உடலோடு உயிரும் சேர்ந்ததுபோல,

"............................... பிரியா
மேவும் கேண்மையின் மிடைந்த
கைத்தாதையும் தாயும்
நீவும் தாளிணை நீங்கிலர்
பின்செல்லச் சென்றார்"

எக்காலத்தும்பிரியாத நிரம்பியஅன்போடு திருக்குமாரனைவளர்த்த கைத்தாதையாகிய சூசையப்பரும், ஈன்றதாயாகிய மரியம்மாளுமாகிய இருவரும் அவர்திருப்பாதத்தைத் தடவிக்கொண்டு நீங்காதவராய் அவரைப்பின்செல்ல, மூவரும் தேவாலயத்தை நோக்கிச்செல்கின்றனர்.

கலிலேயாவின் ஒவ்வொருகிராமத்திலிருந்தும் யாத்திரைக்கூட்டம் ஜெருசலேமைநோக்கிப் புறப்பட்டது. நசரேத்திலிருந்து வெளிப்பட்ட கூட்டத்துடன் திருக்குடும்பத்தினர் சேர்ந்துகொள்ளுகின்றனர்.

நீண்ட வழிப்பயணமாதலால் ஒருவர்க்கொருவர் துணையாயிருக்கும் பொருட்டுக் கூட்டமாகவே யாத்திரை செய்வது அவர்கள்வழக்கம். பெண்கள் ஒருபுறமாகவும், ஆண்கள் ஒருபுறமாகவும் தாவீதுஇராசாவின் சங்கீதங்களைப் பாடிக்கொண்டு செல்லுகின்றனர். அவர்களோடுசேர்ந்து யேசுவும் பாடிக்கொண்டே ஆனந்தமாக வழிநடக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனவிலிருந்து திரும்பும் மேற்றிராணியார்

செஞ்சீனவிலிருந்து மற்றும் இருகுருப்பிரசாதிகளுடன் நாடு கடத்தப்பெற்றவரும், கம்யூனிஸ்தர்களால் சிறைச்சாலையில் அடைத்துவைத்து இம்சிக்கப்பட்டவருமான மகாவந். டெவேபிறி ஆண்டவர் 'கம்போஷ்' எனும் பிரான்சிய கப்பலிலே பிரான்சுக்குச் செல்லும்வழியில் சென்றவெள்ளிக்கிழமை கொழும்புகண்டு செல்லுகின்ருர்.

அவர் "ரைம்ஸ்" பத்திரிகை நிருபர் ஒருவருடன் பேசியபோது பின்வருமாறு தெரிவித்துப்போயிருக்கின்ருர்: "நாமும், டேமியர், பொனிஷோன் என்ற இருகுருப்பிரசாதிகளும் கம்யூனிஸ்தர்களாலே ஷாங்காய்நகரில் பத்துமாதகாலம் சிறைவைக்கப்பட்டிருந்தோம்; சிறைச்சாலை அதிகாரிகளால் நாங்கள் ஏறக்குறைய ஒவ்வொருநாளுமே விளக்கள்மூலம் விசாரணைக்குள்ளாய்ப் பரிசோதனை செய்யப்பட்டுவந்தோம்; சிறைச்சாலையிலே நாங்கள் மனுத்தன்மையற்றவிதமாக நடத்தப்பட்டு மிகவும் கேவலமானநிலைமையில் சீவித்துவந்தோம்; நாமும், இந்த இருகுருப்பிரசாதிகளும் எங்கள் குருத்துவஅங்கிகளைத் தரிக்கத்தானும் அனுமதிக்கப்படவில்லை; மறியற்கூட உடைகளையே நாம் தரிக்க வேண்டியவர்களானேம்; எங்கள் ஒரேயொருகுற்றம், நாங்கள் கத்தோலிக்கராய் இருந்ததுதான்; சமயவழிபாட்டுச் சுதந்திரத்தைத் தாங்கள் அனுமதித்திருப்பதாகச் சிவப்பர்கள் கூறுவதெல்லாம் முற்றும் விழல் வார்த்தைகளாகும்" எனக் கூறலாயினர்.

இந்த மேற்றிராணியாரும், ஏனைய இருகுருப்பிரசாதிகளும் சென்றசித்திரைமாதம் 22-ந் திகதியன்று சிறையிலிருந்து விடுதலைசெய்யப் பெற்ருர்கள். இவர்கள் ஷாங்காய்நகரிலிருந்து றெயின்வண்டி மூலம் ஹொங்கோங்குக்குக் கொண்டுபோகப் பெற்ருர்கள். சீனமண்ணில் இனிமேல் கால்வைக்கப்படாதென்று சீனப்பொலிஸ் அதிகாரிகளால் எல்லைப்புறத்தில்விட்டு இவர்களுக்குச் சொல்லப்பட்டது. மேற்றிராணியாருக்கு வயது 68. இவர் சீனவிலே நின்போநகர் மேற்றிராணியாராகஇருந்துவந்தார். யேசுசபையைச்சேர்ந்த வண. பொனிஷோன்சுவாமியார் ஷாங்காய் நகர சர்வகலாசாலையிலே சட்டக்கலாசங்க தலைவராக விளங்கியிருந்தவர்.

## 20,000பேரின் மனந்திரும்புதல்

தற்சமையம் தேசியசீன அரசாங்கத்தின் தலையிடமாய் இருந்துவருகின்ற போர்மோசாதீவின் பூர்வீகசனங்களிலே 550 பேரைத் தமதுமிஷனரிய தொண்டின் முதலாவதுவருடத்தில் மனந்திருப்பிப் பிரஸ்தாபம்பெற்றுள்ள ஓர் ஸ்பானிய இளங்குரவரான வண. காஸ்றர் ஓசர்ஞேசுவாமியார் அடுத்துநிகழும் ஐந்துவருடங்களிலே மேலும் அவர்களில் இருபதினையிரம்பேரை மனந்திருப்பிவிடலாமென நம்புகின்ருர். சென்ற பாஸ்குத்திருநாளன்று அவர் முன்சொன்ன 550 பேரையும் மனந்திருப்பியதோடு ஓர்கிராமம்முழுவதையுமேமனந்திருப்பிவிடலாயினர். இந்தப் பூர்வீகசனங்களிலே இருபதினையிரம் பேர்வசிக்கின்ற மற்றும் சுமார் நாற்பது கிராமங்களின் தலைவர்கள் கத்தோலிக்க சமயத்தைப் படித்தறிய ஓர்சந்தர்ப்பத்தைத் தங்களுக்கு அருளுமாறு சுவாமியாரைக் கேட்டிருக்கின்ருர்கள். மன்டறினிய, ராய்வனீஸிய பாஷைகளையும், ஓர் மாதிரி மலாயபாஷை போன்ற அப்பழங்குடிகளின் பாஷையையும் பேசுகிற இந்த இளங்குருவானவர் அந்தக்கிராமங்களுக்கு அனுப்பி வைக்குமாறு தற்போது இருபதுஉபதேசிமார்களைப் பயிற்றிவருகின்ருர்.

## கம்யூனிஸ்த அட்டூழியங்கள்

ஐந்துகுருமார் பாரிய சற்களிடையே தங்களுடைய சிரசுகளை வைத்து நெரித்துக்கொல்லப்பட்டனர்; ஒருவர் உயிருடன் புதைக்கப்பட்டனர்; மற்ருெருவர் தீமூட்டிஎரிக்கப்பட்டனர்; பதின்மூன்றுபேர் நிலஇழுவையாய் இழுத்துக்கொண்டு போகப்பெற்றுச் சாகஅடிக்கப்பட்டனர்—இவைகள் சீனக்கம்யூனிஸ்தர்கள்செய்துள்ள பயங்கரஅட்டூழியங்களின் அட்டவணையிலே ஒருபகுதியாகும். சீனவிலே நெடுங்காலம் திருத்தொண்டாற்றிய காலங்கண்ட ஓர்மிஷனரியாகிய வண. தோமஸ் போவர்சுவாமியார் "சீனவிலே கத்தோலிக்கதிருச்சபையைத் திட்டப்படிஅழித்தல்" எனும்நாமத்துடன் எழுதிய அறிக்கைஒன்றில் இவ்வாறு காணக்கிடக்கிறது. கம்யூனிஸ்தர்களாலே கொலைசெய்யப்பட்ட 166 குருமார், பிறதர்மார், கன்னியாஸ்திரிமாரின் நாமங்களையும், அவர்கள்கொலையுண்டதிகதி, இடம்ஆகியவற்றையும் இந்தஅறிக்கை தந்திருக்கிறது.

## நாற்பத்தோராவது யோசெவ்

நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவருக்குத் துணைமேற்றிராணியாராக மகாவண. யோசெவ் பெர்னிக்கோன்சுவாமியார் சமீபத்திலே அந்நகரிலுள்ள அர்ச். பத்திரிசியாரின் ஆசனக்கோவிலில் அபிஷேகஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர். இந்த அபிஷேகதிருச்சடங்கு அர்ச். சூசையப்பர் திருநாளுக்கு மறுநாள்நடந்தேறியது. புதிய மேற்றிராணியார் யோசெவ் எனும் நாமம்பூண்ட கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவரின் மூன்று துணைமேற்றிராணிமார்களில் ஒருவர். அமெரிக்க ஐக்கியதேசத்திலே தற்போது அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாராய் 201பேர் இருந்துவருகின்றனர். இவர்களிலே புதியமேற்றிராணியாரைத் தவிர, யோசெவ்எனும் நாமந்தாங்கியவர்களாய் வேறும் 40 அதிமேற்றிராணிமார் மேற்றிராணிமார்கள் இருந்துவருகின்ருர்கள்.

## குஷ்டரோகரின் குருவானவர்

பேரான குஷ்டரோகர் குடியேற்றதலமாகிய மொலக்காய் தீவிலே குஷ்டரோகரின அப்போஸ்தலரெனப் பெயர்விளங்கிய வண. தமியான்சுவாமியாரினிடமாகத் தொண்டாற்றிவருகின்ற வண. கிறிஸ்ரோபர் லோகன்சுவாமியார் சமீபத்திலே தமதுஜனனநாடாகிய அயர்லாந்து சென்றிருக்கின்ருர். ஒன்பதுசதுரமைல் விஸ்தீரணமுடையதும், 300 குஷ்டரோகர் குடியேறியிருப்பதுமான மொலாக்காய்க்குடாநாட்டில்உள்ள ஒரேயொருகுருவானவர் இவரே. தமியான்சுவாமியாரது காலத்திலே அங்கு ஆயிரம் குஷ்டரோகர் இருந்தார்கள். வண. லோகன்சுவாமியார் இற்றைக்கு ஏழுவருடங்களின்முன் அங்குசென்ருர். நவமாகக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் குஷ்டரோகத்துடன் நடத்தும் போராட்டத்தில் வெற்றியளித்துவருவதாக இவர் கூறுகின்ருர்.

—ஜெருசலேம்நகரிலே நமது திவ்வியகர்த்தர் மாணதண்டனை விதிக்கப்பட்ட போஞ்சியுபிலாத்துவின் அரண்மனையிலிருந்து அவர் சிலுவையில் அறையப்பட்ட கல்வாரிமலைவரையிலுள்ள வியாகுலபாதையிலே அவரது திருஅடிகளைப்பின்பற்றி உலகின் அநேகபகுதிகளிலிருந்துபோன 5,000 திருயாத்திரிகர்கள் சென்றபெரியவெள்ளிக்கிழமை சிலுவைப்பாதைப் பத்திமுயற்சிசெய்தார்கள். இவ்வளவு தொகையானேர் அதில் ஈடுபட்டது ஞாபகத்துக்கெட்டாத ஓர்சம்பவமாம்.

# கடைசித் திருச்சுரூபம்

ரோமாபுரி, சம்பேதுருவானவர்மகாலய மாடப்புரைகளின் அணிவரிசையிலே கடைசியாக இன்னமும்காலியாயிருந்த ஒன்றிலும் சென் வின்சென்ற் டீ போலின் பிறர்சிநேககன்னிகாசபையை அடியிட்டவளான அர்ச். லூயிஸ் டே மறிலாக்அம்மாளின் திருச்சுரூபம் சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்டதோடு, அம்மகாலய மாடப்புரைகள்எல்லாவற்றிலும் திருச்சுரூபங்கள் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டன. இவ்வாறு அதிலுள்ளமாடப்புரைகளிலெல்லாம் சுரூபங்கள்ஸ்தாபிக்கப்படச் சுமார் இரண்டரை நூற்ருண்டுகள் சென்றிருக்கின்றன. இந்தமாடப்புரைகளிலே 1706-ம் ஆண்டு முதன்முதலாக அர்ச். தொமினிக்குவின் சுரூபம் ஸ்தாபிக்கப்படலாயிற்று. அதனைத்தொடர்ந்து 38 சுரூபங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவைகளெல்லாம் சந்நியாச, கன்னிகாசபைகளை அடியிட்டவர்களின் சுரூபங்களாகும். இவற்றிலே ஆடவர்களான அர்ச்சியசிஷ்டர்களின் சுரூபங்கள் 29. மூழூச் சுரூபங்களும் ஏறக்குறைய 800 தொன் நிறைகொண்ட மிகவுஞ் சுத்தபளிங்குக்கல்கொண்டு செய்யப்பட்டன. மேல்வரிசையிலுள்ள சுரூபங்கள் தரைமட்டத்திலிருந்து சுமார் 19 அடிஉயரத்திலும், கீழ்மாடப்புரைகளிலுள்ள சுரூபங்கள் சுமார் 15அடிஉயரத்திலும் நிறுவிநிற்கின்றன. நான்குதவிர ஏனையவைகளெல்லாம் இத்தாலியசிற்பிகளால் செய்யப்பட்டன. அர்ச். லூயிஸ் டே மறிலாக்அம்மாளின் திருச்சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டபோது, அவள்அடியிட்ட பிறர்சிநேக கன்னிகாசபையின் சிரேஷ்டதாயாரும், அச்சபையைச்சேர்ந்த 300 கன்னியாஸ்திரிமாரும், பரிசுத்தஸ்தானத்தினிடமாக இருந்துவருகின்ற பிரான்சியஸ்தானிகரும் பிரசன்னமாயிருந்தார்கள்.

## குருமாரான தொழிலாளர்கள்

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள ஹங்கேரியநாடு உலகில் குருதொழிலாளரின் மிகப்பெருந்தொகையான படையணிகளுள் ஒன்றைக் கொண்டிருக்கின்றது; ஆனல், இவர்கள் தொழிலாளர்களை ஞானவிசாரணை செய்யக் கூடியவர்களாய் இருப்பதற்குப்பதில் தங்கள்நாளாந்த சீவனத்துக்குத் தேவைப்படுவதைக் கண்டுகொள்ளும் பொருட்டு வேலைசெய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாயிருக்கின்ருர்கள் என்று அந்நாட்டிலிருந்து தப்பியோடிய ஓர் யேசுசபைக்குரவரான வண. பிரான்சீஸ் ரொத்சுவாமியார் வாஷிங்ரன்நகரிலே தெரிவித்திருக்கின்ருர். 1950-ம் ஆண்டின் ஆனிமாதத்திலே அங்கு சந்நியாசசபைகளைச் சேர்ந்த சுமார் 4,000 குருமாரை அவர்களது ஆச்சிரமங்களிலிருந்து கம்யூனிஸ்தர்கள் வெளியேற்றிக் கொண்டுபோய்க் காவல்முகாங்களில் அடைத்துவைத்தார்கள். பிந்த ஒருவருடத்தின்பின் இவர்களை விடுதலைசெய்து, இவர்கள் குருத்துவதொண்டு நடத்தக்கூடாதென ஓர்புதியசட்டத்தின் மூலம் விலக்கிவிட்டார்கள். அதனல் இவர்களில் சிறுபான்மையினர் தாங்கள் முன்னர் பார்த்துவந்த பதவிகளில் அமர்ந்துகொள்ள, பெரும்பான்மையினர் சுரங்கங்களிலும், தொழிற்சாலைகளிலும், பிறதொழில் துறைகளிலும் தொழிலாளர்களாய்ச்சேர்ந்து வேலைசெய்து வருகின்ருர்கள். இவர்கள் தங்கள் இல்லங்களில் பிரத்தியேகமாகத் திவ்விய பூசை நிறைவேற்றலாம்; ஆனல், தேவதொண்டு விஷயமாய்ப் பிறருக்கு ஒருவார்த்தைதானும் சொல்லப்படாதென்பது கண்டிப்பான சட்டமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத
# பாதுகாவலன்
1954-ம் ஆண்டு
ஆனி மாதம் 3-ந் திகதி

## அர்ச். பத்தாம் பத்திநாதர்

ரோமாபுரியிலே சம்பேதுருவானவர் மகாலயத்தின் மகாசதுக்கத்திலே சென்ற 29-5-54 சனிவாரம் நாற்பதின்மருக் கதிகமான கருதினல்மாரும், சுமார் நானூறு அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும், ஐந்துலட்சம் திருயாத்திரிகர்களும் சமுத்திரம்போலத்தேங்கியிருந்த சமுகத்திலே பரிசுத்த பாப்பரசர் திருச்சபையின் பாரம்பரியமான ஆடம்பர திருவைபவங்களுடன் முத் பத்தாம் பத்திநாதருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டியருளினார். அதனால் கத்தோலிக்க திருச்சபைப் பஞ்சாங்கத்திலே அன்றையதினம் மற்றுமோர் அர்ச்சியசிஷ்டவர் சேர்க்கப்பெற்று, அத்திருப்பட்டஞ்சூடிய எழுபத்தெட்டாவது பாப்பானவராயினர்.

ஓர் இத்தாலிய கிராமத்தபாற்காரனின் புதல்வராய் 1835-ம் ஆண்டு ஆனிமாதம் 2-ந்திகதி பிறந்தார், ஜுசையப்பு சார்த்தோ என்ற நாமந்தாங்கிய பத்தாம் பத்திநாதர். தமது உலகவாழ்க்கையை அதிகந்தாழ்ந்தநிலைமையில் ஆரம்பித்தவர், கடைசியாகத் திருச்சபையின் மகாஉயர்ந்த பதவிவகித்துக் "கிராமிய பாப்பானவர்" என்னும் புகழ் நாமந்தாங்கிப் பெரும்பிரக்கியாதியுடன் தம்முடைய உலக வாழ்க்கையைமுடித்தார். தமது வீட்டிலிருந்து நாலுமைல்தூரமான பாடசாலைக்கு நடந்து செல்லும்போது தம்முடையமத்தியானச் சிறுபோசனத்தைத் தாம் அணிந்துகொள்ளும் "ஷேட்"டின் உட்புறமாக வைத்துக்கொண்டும், தோல் தேய்ந்துபோகாமல் பாதுகாக்குமாறு தம்முடைய சப்பாத்துகள் இரண்டையும் கயிற்றால் சுற்றிக்கட்டித் தமதுகழுத்தில் மாட்டிக்கொண்டும் வறுமையின் சின்னமாக விளங்கியவர் கடைசியாய்ப் பெருமையின்சின்னகத் திகழலாயினர்.

ஒருபால் தமது வறுமையையும், மறுபால் தமதுதிறமையையும்—ஒருபால் தம்முடையதீர்க்க புத்தியையும், மறுபால் தம்முடைய தேவபத்தியையும் அறியவந்து மனமுவந்தளித்த உபகார வேதனத்திலே — தமது வறியதாயாரின் அரியதியாகங்கள் மத்தியிலே குருமடத்திற் சேர்ந்து 23-ம்வயதிலே குருப்பட்டம்பெற்றபிறகு விசாரணைப் பங்கு உதவிக்குரவராய், பங்குக்குரவராய், குருமடத்துப்பேராசிரியராய், விக்கார் - ஜெனறலாய், முக்கியத்துவம்வாய்ந்த மூன்று மேற்றிராசனங்களின் மேற்றிராணியாராய், கருதினலாய், பத்திரியாக்குவாய்ப் பதவிக்குமேல் உயர்ந்த பதவிகள் வகித்து, முடிவிலே அவற்றிற்கெல்லாம் முடிசூட்டியவாறாகப் பாப்பானவராகத் தெரியப்பெற்று, சம்பேதுருவானவரின் சிம்மாசனத்தெழுந்து, பிரஸ்தாபம்பெற்ற வத்திக்கான் அரண்மனையைத் தமதுவாசஸ்தலமாகக்கொண்டு, பதினெரு வருடகாலம் கத்தோலிக்க திருச்சபையை அதிபிரதாபத்துடன் ஆட்சிசெய்துவந்தபத்தாம்பத்திநாதர் அன்று ஓர்விசாரணைப்பங்கிலே ஓர்உதவிக்குரவராகக் கடமைபார்த்துவந்தபின் மற்றொரிடத்துக்கு மாற்றப்பட்டபோது, அவர்முதன்முதலாகக் கடமைபார்த்த அந்த விசாரணைப்பங்குக்குரவர் அவர்பிரிவின்போது கூறிய தீர்க்கதரிசனம் — அதாவது "நமதுஉதவிக்குரவர் ஓர்அர்ச்சியசிஷ்டவர்;........ யாசகன் ஒருவனுடன் அவர் தமதுமேலங்கியைப் பங்குபோட்டுக் கொள்ளமாட்டார்; ஆனல், முழுஅங்கியையும் அந்தப்படியே அவனுக்குக் கொடுத்துவிடுவார்" என்றுகூறிய தீர்க்கதரிசனம் இன்றுபூர்த்தியானதைக் கண்டு எவர்தான் பேருவகை எய்தார்? அவர் பதினெரு ஆண்டுகள்மாத்திரமே திருச்சபையை ஆண்டுள்ளாரெனினும், அத்தனைவருடங்களிலும் "கிறீஸ்துநாதரில் சகலத்தையும் புதுப்பித்தல்" எனும் தமதுவிருதுமொழிக்கிணங்க அவர் சாதித்துள்ளவைகளோ இம்மட்டென்று சாற்றுந்தரமன்று. தற்போது அர்ச்சியசிஷ்ட பட்டஞ்சூட்டிப் பலிபீடவணக்கத்துக்கு உயர்த்தப்பட்டிருக்கும் பத்தாம்பத்திநாதர் எங்கும் மகிமையடைவாராக!



## சதாசகாயமாதா கோணம்

### தேவதாயாருக்கு ஒருகடிதம்

கிட்டத்தட்ட அறுபது வருடங்களுக்குமுன் பரீஸ் பட்டணத்திலே பகிரங்க வீதிஒன்றின் தொங்கலிலே "பெட்டிசம்" எழுதுவோரின் கூடம் ஒன்று இருந்தது. இந்தப்பெட்டிசம் எழுதுவோர் ஓர்இளைப்பாறிய போர்வீரர். அவர் அதிகம்முட்டுப்பட்டவர் அல்ல. என்றாலும், பொழுதுபோக்குக்காகவும், தனதுநாளாந்த சீவியத்துக்கேற்ற ஊதியத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற ஆசையாலும் மற்றையோருக்குக் கடிதம் எழுதிக்கொடுக்கும் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தார்.

தன்னிடம் கடிதம்எழுதுவிக்க ஆரும் வரமாட்டார்களோ என்று வழிபார்த்துக் காத்துக்கொண்டிருந்த இந்த எழுத்தாளர் வாயில்சுங்கான் வைத்துக்கொண்டிருந்ததை மங்கிய கண்ணாடியன்னலூடே பார்த்தான், ஒன்பது வயது நிரம்பாதபாலியன் ஜீன்.

"வந்தனம், ஐயா! நான் ஒருகடிதம் எழுதுவிக்க இவ்விடம்வந்தேன்" என்றான்ஜீன்.

"பத்துச்சதம் கொடுக்கவேண்டும்" என்றார் பெட்டிசமஎழுதிப் பிழைக்குந் தாத்தா பொனின்என்பார். இவர் சற்றுவயதுசென்றவராதலால் எல்லோரும்இவரைத் தாத்தாஎன்று அழைத்தனர். அப்படி அழைக்கப்பட்டதிலும் அவருக்கு ஒருஅளவு சந்தோஷந்தான்.

தலையிற்தொப்பி தாங்காத ஜீன் தொப்பிஎடுக்கவேண்டிய அவசியமே ஏற்படவில்லை.

ஆதலால் "அப்படியானல், தயைசெய்து என்னை மன்னித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு வெளிக்கதவோரந் திரும்பினன்.

பாலியஜீனின் தோற்றத்திலீடுபட்ட தாத்தா பொனின்: "தம்பி! நீ ஒரு போர்வீரனின் மகனே" என்று கேட்டார்.

"இல்லை, நான் என் அம்மாவின் மகன்; அவவுக்கு எவர் உதவியும் இல்லை; தட்டன்தனியனாய் இருக்கிறா" என்றான் ஜீன்.

"நல்லது, உன்னிடம் பத்துச்சதமும் இல்லையா?" என்று கேட்டார் தாத்தாபொனின்.

"என்னிடம் ஒருசதமும் இல்லை" என்று பதில்கொடுத்தான் பாலியன்.

"உன்னுடைய அம்மாவிடமும் பத்துச்சதம் இல்லையா? இருக்கட்டும், தம்பி! இப்போது நீ எழுதுவிக்க வந்த கடிதம் ஏதும்சாப்பாட்டுக்கு உதவிபெறும் நோக்கமாகத்தானே."

"ஆம், சரியாய்ச்சொன்னீர்கள்."

"சரி, இப்படிவா; ஒருசிறு கடதாசித்துண்டாலும், எட்டுப்பத்துவரி எழுதித்தருவதாலும் ஒருவர் மிகவும் வறுமைத்தசையடைய முடியாது" என்று கூறிக்கொண்டு தாத்தா பொனின் கடதாசியை ஒழுங்குபடுத்திப் பேனவை மையிற்தோய்த்து:

"பரீஸ், 17-1-189..."

"திரு............" என்று எழுதிவிட்டு

"அவருடையபேர் என்ன?" என்றார்.

"ஆருடையபேர்" என்று கேட்டான் ஜீன்.

"நீ கடிதமெழுதவிரும்பிய துரைமகனின்பெயரைத்தான் கேட்கிறேன்" என்றார் தாத்தாபொனின்.

"எந்தத் துரைமகன்" என்று வினவினன் ஜீன்.

"நீ சாப்பாட்டுக்கோ, அல்லது வேறுஎன்னஉதவிக்கோ எழுதவிரும்பிய கனவான் யார்என்றுதான் கேட்கிறேன்" என்றார் தாத்தாபொனின்.

விஷயத்தை விளங்கிக்கொண்ட ஜீன் "கடிதம் தனவந்தனுக்கல்ல" என்றான்.

"அடடா! அப்போ கடிதம் ஒரு சீமாட்டிக்கோ?" என்றுகேட்டார்.

ஜீன் சற்றுஅங்கலாய்ப்பாய்ச் சுற்றுமுற்றும் பார்த்தான். என்னசொல்வதெனத் தோன்றாது சற்றுத்திகைத்தான்.

"அடே, தம்பி! ஆருக்குக் கடிதமெழுதுவிக்க வந்தாய்என்று சொல்லித்தான் தொலையேன்" என்றார் தாத்தா பொனின்.

தான் எழுதுவிக்கவேணுமென்ற கடிதத்துக்குப் பகிரங்க பெட்டிசஎழுத்தாளரின்உதவி தேவையில்லையென்று அவன் மனதில் உணர்ந்திருந்தான். என்றாலும், தைரியத்தைக்கைவிடாது, "பரிசுத்த தேவதாயாருக்கு ஒருகடிதம் எழுதுவித்தனுப்ப விரும்புகிறேன்" என்றான் ஜீன்.

தாத்தாபொனின் இதைக்கேட்டுச் சிரிக்கவில்லை. பேனவை மேசையில் வைத்தார். சுங்கானை வாயிலிருந்து எடுத்தார். பையனைக் கூறுகுறிப்பாய்ப் பார்த்தார். "பரீஸ்பட்டணத்தில் உபத்திரவத்துக்கும், இடைஞ்சலுக்கும் இப்போ குறைவுஇல்லைஎன நான் அறிவேன்; தம்பி! உன்னுடைய பெயர் என்ன?" என்று கேட்டார்.

"ஜீன்" என்றான் பையன்.

"தகப்பன்பெயர் என்ன" என்று கேட்டார் தாத்தாபொனின்.

"ஜீன்" என்றுமாத்திரம் என்னை அழைக்கிறார்கள்; வேறுபெயர் இல்லை" என்றான் பையன்.

இதைக்கேட்ட தாத்தாபொனினுக்குக் கண்கள்கலங்கின. அதை ஒருவகையாகச் சமாளித்துக்கொண்டு,

"பரிசுத்ததேவதாயாருக்கு நீ எழுதவிரும்புவதுதான் என்ன?" என்று வினவினார்.

"அம்மா நேற்று 4 மணிதொடக்கம் ஒரே நித்திரையாய்க் கிடக்கிறா; அவவை என்னால் எழுப்பமுடியவில்லை; ஆகவே, என்மேல் இரக்கங்கொண்டு அவவைநித்திரையால் எழுப்பித்தரும்படி பரிசுத்ததேவதாயாருக்கு ஒருகடிதம் எழுதித்தரவேண்டும்" என்றான் ஜீன்.

தாத்தாவுக்கு மார்பு அடைப்பு வரும்போலத் தோன்றியது. பையன் சொன்னதைவிளங்கிக்கொள்ள விருப்பமில்லாதவர்போன்று தொடர்ந்துவினவினர்.

"இப்போ சாப்பாட்டைப்பற்றிச் சொன்னாய்அல்லவா? அதை மறந்துபோனாயா?"

"சாப்பாடுந் தேவைதான்; எங்களிடம் சாப்பிடவும் ஒன்றுமில்லை; அம்மா நித்திரையாகுமுன் எஞ்சியிருந்த ஒருசிறு காய்ந்த ரொட்டித்துண்டை எனக்குக்கொடுத்தா."

"அவ என்ன சாப்பிட்டா?"

"இரண்டு நாட்களுக்கு முன்பு பசிக்கொடுமை தாங்கமுடியவில்லையே" என்றுமாத்திரம் சொன்ன.

"அவவைஎழுப்ப என்னசெய்தாய்?"

"நான்வழக்கமாய்ச் செய்வதுபோல அவவின்முகத்தைக் கொஞ்சினேன்."

"அவ மூச்சுவிட்டுக்கொண்டிருந்தாவா?"

ஜீனின்முகத்தில் புன்னகைதவழ்ந்தது. அவனைப்பார்த்த தாத்தாவுக்கு அவன்மட்டில் ஒருவசீகரம்ஏற்பட்டது. பையன் அழகேஉருவான ஒருசிலைபோல் நின்றான்.

"எனக்குத் தெரியாது; மனிதர் மூச்சுவிடுவதில்லையோ?" என்று கேட்டான்.

தாத்தாபொனின் தன்கண்களிலிருந்து வழியுங் கண்ணீர்த்துளிகளை மறைப்பதற்காகத் தலையை மறுபக்கந் திருப்பிக்கொண்டார்.

(தொடரும்)

## நன்றியறிந்த தோத்திரம்

எனதுமகளின் விவாகத்தையிட்டு என்செய்வதென அறியாது நிலையற்ற மனமுடையவனாகச் சென்ற நாலுவருடங்களாகக் கவலைகொண்டிருந்தேன். பணமுடையும், எதிரிடையுமே விசேஷதடைகளாய் இருந்தன. சதாசகாயமாதாவின் நன்மைத்தனத்தையும், தம்மை நம்பினவருக்கு அவசெய்யும் சகாயங்களையும் விபரித்துச்சென்றமார்கழிமாதம் ஓர்நாள் எங்கள் கட்டளைக்குரவர் அரியதோர் பிரசங்கம்செய்து அவவுடைய சாயலுள்ள படத்தையும்எங்கள்ஆலயத்தின் ஓர்பகுதியில் ஸ்தாபித்துப் புதன்கிழமைப்பத்தியை ஆரம்பித்துவைத்தார். அவ்வேளை அருளேபுரியும் அன்னையில் எனக்கும் நம்பிக்கைவந்து அவவை அண்டினேன். "சதாசகாயமாதாவை நோக்கி நவதினவேண்டுதல்" என்ற சிறியபுத்தகமும் வாங்கினேன். என்னால் இயன்றஅளவில் அவவை மன்றாடிவந்தேன். அன்னையும் என்னில்இரங்கின! வேண்டியபணமும் வந்து சேர்ந்தது. விவாகமும்நடந்தேறியது. எங்கள் சதாசகாயத்தாய் என்றும் எல்லாராலும் புகழப்படுவாவாக!

இளவாலை ஜே. ஜி.

விற்பனைக்கு!


திரு இருதய
**வணக்க மாதம்**

| | ரூ. ச. |
|---|---|
| மட்டக்களப்புப் பதிப்பு | ... 1-00 |
| தபாற் செலவு | ... 10 |
| திருச்சிறுப்பள்ளிப் பதிப்பு | ... 2-00 |
| தபாற் செலவு | ... 20 |

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாம்பத்திநாத பாப்பானவர் அர்ச்சியசிஷ்ட பட்டம் சூடினர்



வத்திக்கான்நகர் தந்திச்சமாச்சாரம்—ஞாயிறு

"கிராமிய பாப்பானவர்" என்று அழைக்கப்படுகிறவரான பத்தாம்பத்திநாத பாப்பானவர் மிகப்பரந்த சம்பேதுருவான வர் மகாலயசதுக்கத்திலே, பெருந்திரளாகக் குழுமியிருந்த ஐந்து லட்சம்யாத்திரிகர்களின் சமூகத்திலே நேற்றைத்தினம் (சனிக் கிழமை) ரோமான்கத்தோலிக்க திருச்சபையின் ஓர்அர்ச்சியசிஷ் டராகப் பிரகடனஞ்செய்யப் படலாயினர்.

முதலாவது உலகயுத்தத்தைத் தடுத்துக்கொள்ளமுடியாமற் போனதன்மேல் மனமுடைந்தவராய் 1914-ம் ஆண்டு மரண மடைந்தவரான இந்தவறிய வெனிஷியர் 1712-ம் ஆண்டுக்குப் பின் இவ்விதம் திருப்பட்டம் அளித்து மகிமைப்படுத்தப்பெற்ற முதல்பாப்பானவரும், திருச்சபையின் 4,560 அர்ச்சியசிஷ்டர்க ளின்வரிசையில் சேர்ந்துகொண்ட 78-வது பாப்பானவருமாவர். சோபிதமுற்றுவிளங்கிய சாரூபஉடைகள் அணிந்த மெய்காப் பாளர், அரசதோழர், குருசிரேஷ்டர்களால் புடைசூழப்பெற் றுத் தமதுசுவர்ண—தாமிரவர்ணச் சிங்காசனத்திலே மகாலய சதுக்கத்துக்குச் சுமந்துகொண்டுவரப்பெற்ற பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசராலே அவர் "நமது காலத்துக்கென்று தேவபராமரிக்கையால் உயர்த்தப்பெற்ற அர்ச்சியசிஷ்டர்" எனப் பிரகடனஞ்செய்யப்படலாயினர்.

இத்திருவைபவத்தின்போது பிரான்ஸ், ஸ்பெயின், குடி யரசு அயர்லாந்து, இத்தாலி, போர்த்துக்கால், கலம்பியா ஆதிய நாடுகளின் அரசாங்கங்கள் தங்கள் அதிகாரபூர்வமான பிரதி நிதித்துவ தூதுக்கோஷ்டிகள்மூலம் பிரசன்னமளித்தன. நாற் பதின்மருக்கு மேற்பட்ட கருதினல்மாரும், ஏறக்குறைய 400அதி மேற்றிராணிமார், மேற்றிராணிமார்களும் இந்தத்திருவைபவத் திற்கென ஒன்றுகூடியிருந்தார்கள்.

"முத்திப்பேறுபெற்ற பாப்பானவராகிய பத்தாம்பத்திநாத ரை ஓர்அர்ச்சியசிஷ்டராக நிரூபித்தும், நிர்ணயித்தும் அர்ச்சிய சிஷ்டர்களின் இடாப்பிலே வரைகின்றோம்" என்ற அர்ச்சிய சிஷ்டபட்டஞ்சூட்டும் பயபக்திக்குரிய திருமொழிகளைப் பாப்பரசர் வசனித்தபோது, அங்குபிரசன்னமாயிருந்த பிரமாண்டமான பக்தர்குழாங்களின் மத்தியிலிருந்து பெரும் வாழ்த்தொலிமுழக் கம் எழலாயிற்று.

## சுதேச வர்த்தமானம்

### புகையிலை ஒப்பந்த நிபந்தனைகள்

யாழ்ப்பாண—மலையாளப் புகையிலை ஏற்றுமதிவிஷயமாய் இந்தியஅரசாங் கம் இலங்கை அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தநிபந்தனைகளை மீறவில்லையென்று கொழும்பிலுள்ள இந்தியஹைகம்மிஷனரின் காரியாலய அதிகாரிஒருவர் தெரிவித்து, புகையிலை ஒப்பந்தப்படி வருடந்தோறும் இறக்கு மதிவரிச் சலுகையுடன் 2,500 கண்டி யாழ்ப்பாண – மலையாளப்புகையிலையை இறக்குமதிசெய்வதை இந்தியஅரசாங் கம் அனுமதித்தது. இலங்கையிலே புகையிலைசெய்கிறவர்கள் திருவாங்கூர்—கொச்சியிலுள்ள மூன்று இறக்குமதி யாளருடன் ஒப்பந்தம்ஒன்று செய்து கொண்டால் ஒப்புக்கொள்ளப்பட்ட புகையிலைமுழுவதையும் திருவாங் கூருக்கு ஏற்றுமதிசெய்வதில் எவ்வித கஷ்டமு மிராதென்றும் அவர் கூறி யிருக்கின்றார்.

### றெயில்வே நஷ்டம்

இலங்கை றெயில்வேக்குச் சென்ற 1953-ம்ஆண்டில் 1 கோடியே 54லட் சத்து 23ஆயிரத்து 931 ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக றெயில்வே மனேஜர் அவ்வாண்டிற்கான தமதுநிர்வாக அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார். சென்றவருடம் றெயில்வேக்குக் கிடைத்தவருமானம் 7 கோடியே 1லட்சத்து 43 ஆயிரத்து 273 ரூபா. இதுமுந்தியவருடத்திலும் சுமார் 8லட் சம்ரூபாவால் குறைந்துள்ளது. சென்ற வருடத்தில் றெயில்வேப்பிரயாணிக ளின்தொகை குறைந்தமையால் சுமார் 10லட்சம்ரூபாவருமானம் குறையலா யிற்று. றெயில்வேக்குத் தேவைப்படும் தளவாடங்களின் விலையேறியிருப்ப தும், அதில் கடமைபார்க்கிறவர்களின் தொகை அதிகரிப்பதுமே சென்றவரு டம் செலவுஅதிகரிக்கக் காரணமாம்.

### பண்ணைக் கடற்பாதை

பண்ணைக் கடற்பாதையை விரை விலே பூர்த்திசெய்விப்பதன் சம்பந்த மாய்த் தீவுபற்றுமக்கள் சமீபத்திலே அங்குவிஜயஞ்செய்த போக்குவரத்து உதவிமந்திரியாரான திரு. மொண் ரேகு ஜயவிக்கிரமஅவர்களிடம் முறை யிடுசெய்தார்கள். பண்ணைக் கடற் பாதையின் எஞ்சியபகுதியைப் பூர்த்தி செய்ய மூன்றுலட்சம்ரூபாவரை செல வாகுமென்றும், இன்னும் இருஆண் டுகளுக்கிடையிலே அதனைப் பூர்த்தி செய்யத் தாம்நடவடிக்கை எடுப்பதாக வும் அவர்தெரிவித்தனர். இந்தக்கடற் பாதையை விரைவிலே பூர்த்திசெய்யும் படிகேட்டுப் பல்லாயிரக்கணக்கானோர் கையொப்பமிட்டுள்ள மனுஒன்று சமீ பத்திலே போக்குவரத்துமந்திரியாருக் குச் சமர்ப்பிக்கப்பட விருக்கிறது.

### பனைவெல்லச் செய்கை

அகில—இலங்கைக் காந்தீயசேவாசங் கத்தின் முயற்சியால் வயாவிளானுக்கு அணித்தாயுள்ள பலாலிதெற்குப்பகுதி யிலே பனங்கட்டிச்செய்கை ஆரம்ப மாகிவிட்டது. தென்னிந்தியாவி லிருந்து இதற்கெனவந்திருக்கும் திரு. ஏ. ரி. காசிஅவர்கள் அதனைத்தொடக்கி நடத்திவருகின்றார். தென்னிந்தியா விலே தற்போதுகையாளப்படும் நவீன முறையை மேற்கொண்டு பனங்கட்டி, பனங்கற்கண்டு ஆதியவற்றைப் பதநீரி லிருந்து இங்கே உற்பத்திசெய்வதில் பயிற்சியளிப்பதே இவருடையவேலை யாகும். தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் வந்துசேரக் காலதாம தம் ஏற்பட்டமையால் பதநீர்இறக்கு வதற்கென்று முன்னர் ஒதுக்கப்பட் டிருந்த பனைகளின்பாளைகள் முற்றி விட்டன. அதனால் பலாலிதெற்கில் முற்றுதபாளைகளுள்ள பனந்தோப்பு கள் கண்டுபிடிக்கப்பெற்றுக் குத்தகை யில் எடுக்கப்பட்டுப் பதநீர்இறக்கிப் பனங்கட்டிசெய்தல் ஆரம்பமாயிற்று.

### வாழ்க்கைச் செலவுபுள்ளிகள்

இலங்கையிலே சென்ற வைகாசி மாதத்தில் வாழ்க்கைச்செலவுப் புள் ளித்தொகை திரும்பவும் அதிகரித்தி ருக்கிறது. வைகாசிமாதத்தில் புள் ளித்தொகை 101·7. முந்திய சித்திரை மாதத்தில் 100. மீன், மரக்கறி, வெங்காயம், எலுமிச்சம்பழம் ஆதிய வற்றின் விலைகள் அதிகரித்தமையே இதற்குக்காரணமாம். அதனால் படிச் செலவும் முந்தியமாதத்தில் 94 ரூபா 30 சதமாகவிருந்து சென்ற வைகாசி யிலே 96 ரூபா 60 சதமாக அதிகரித்தி ருக்கிறது.

### ஆறுவருட அரிசித்திட்டம்

வருகிற ஐப்பசிமாதமுதல் நடை முறைக்கு வரவிருக்கும் ஆறுவருட அரிசிஉற்பத்தித் திட்டம்ஒன்றை அர சினர் சித்தஞ்செய்திருக்கின்றனர். இத்திட்டப்படி, இலங்கை தனது அரி சித்தேவையிலே பெரும்பகுதியை, அன்றேல் முழுவதையுமே பூர்த்தி செய்துகொள்ளத்தக்கதாய் இன்னும் 2 லட்சத்து 10 ஆயிரம் [illegible] வேளாண்மைக் குள்ளாக்கப்படும். அத் துடன் இயன்றமட்டும் அரிசிஇறக்கு மதியும் கட்டுப்படுத்தப்படும். வருடந் தோறும 8கோடி ரூபாசெலவில் 35 ஆயிரம் ஏக்கர்நிலத்தை நெல் வேளாண்மைக்குக் கொணடுவர அர சாங்கம் தீர்மானித்துள்ளது.

### ஆங்கிலமும் ஆரம்பபாடசாலையும்

ஆரம்பபாடசாலைகளிலே ஆங்கிலம் கற்பிப்பதில் வாரந்தோறும் குறைந்த பட்சம் இத்தனைபாடநேரம் செலவிடப் படவேணடுமென்று தெரிவித்துச் சகல ஆரம்பபாடசாலைகளுக்கும் வித்தியாதி பதி திரு. ரி. டி. ஜயசூரியஅவர்கள் ஓர் சுற்றறிக்கை விடுத்திருக்கின்றார். அதன் படி, மூன்றாம்வகுப்புக்குமேல் ஆங்கி லம் ஓர்பிரதான பாடமாகும். அதனால் (1) மூன்றாம்வகுப்பிலே ஆங்கிலம் கற் பிப்பதில் வாரம்ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ஐந்துபாடநேரம் செலவிட வேண்டும். (2) நான்காம், ஐந்தாம் வகுப்புகளிலே ஆங்கிலம் கற்பிப்பதில் வாரம்ஒன்றுக்குக் குறைந்தபட்சம் எட் [illegible]நேரம் செலவிடவேண்டும்.

## உறுதிப்பூசுதல்

### கத்தோலிக்க ஊழியரின் தேவதிரவிய அனுமானம்

"குருத்துவம்என்னும் தேவதிரவிய அனுமானத்தைப் பெற்றவர்கள் குரு மாராகி, அவர்களே யேசுக்கிறீஸ்து நாதரினிடமாக நின்று குருசேவை செய்கிறார்கள். மெய்விவாகம்என்னும் தேவதிரவிய அனுமானத்தைப் பெற்ற வர்கள் கிறீஸ்துவ தாய்தந்தையராகித் தங்கள் பிள்ளைகளுக்கு உண்மை வழி காட்டிகள் ஆகிறார்கள். வீரத்துவமாக நின்று கத்தோலிக்கஊழியம் செய்வ தற்கு நம்மைப்பக்குவப்படுத்தும் தேவ திரவியஅனுமானம் ஏதும்உண்டா?" என்று 5-ம் வகுப்பில் ஓர்கேள்விகேட் டேன். இந்தக்கேள்வியைக் கேட்ட தும் வகுப்புமுழுவதும் மிகஅமைதி யாகி விட்டது. எல்லாரும் சிந்தனையில் இறங்கினார்கள்போலும்! அப்பொழுது ஒருபையன் எழுந்துநின்று: "ஆம், உறுதிப்பூசுதல் கத்தோலிக்க வீரரின் தேவதிரவிய அனுமானம்" என்று மறுமொழிகூறினன். எல்லாப்பிள்ளை களும் அவனுடைய அறிவைக் கண்டு பெருமை அடைந்தார்கள். அந்தப் பிள்ளையின் மறுமொழியை உதவியா கக்கொண்டு உறுதிப்பூசுதலைப்பற்றிச் சிலஉண்மைகளை அவர்களுக்கு எடுத் துக்கூறினேன்.

உறுதிப்பூசுதல் பெற்றவன் கத்தோ லிக்கஊழியம செய்வதற்கு முழுப்பக் குவம் அடைகிறான். கத்தோலிக்க ஊழியம்என்பது திருச்சபையின் வேத அலுவலில் பங்குபற்றுதலே. அதற்குப் போதியமனத்திடனும், ஆத்துமதைரி யமும், இருதயஓர்மமும் அவசியம் வேண்டியன. இவைகளைத் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரே நமக்குத் தருவார். அவரை உறுதிப்பூசுதல் வழியாகவே பெற்றுக்கொள்ளுகிறோம்.

பரிசுத்தஆவிஎன்னும் திவ்வியஇஸ் பிரீத்துவானவா எங்கள்ஆத்துமங்களில் இறங்கி எங்களைக் குட்டிப்போர்வீரர் ஆக்கிவிடுகிறார். அதனால் நமதுசொந்த ஆத்துமம் பகைவரைஎதிர்க்கப்போதிய பெலம்அடைகின்றது. கிறீஸ்துஇராச னின் ஞானஇராச்சியத்தின் எல்லை விசாலிக்கும்படி போர்புரியவேண்டிய வீரர்ஆகிறோம். துட்டயூதர் திவ்விய யேசுவின் உயிருக்கே உலைவைத்துவிட் டார்கள். அதைப்போலத் தங்களுக் குமே ஏதும்கெடுதி வருமோ என்று பயந்து பதுங்கித்திரிந்த அப்போஸ் தலர் திவ்வியஇஸ்பிரீத்துவைப் பெற்ற தும் எவ்விதகூச்சமோ, பயமோ இல் லாமல் யேசுநாதரைப்பற்றித் துணி கரத்துடன் பிரசங்கம்பண்ணத் தொடங்கினார்கள்.

திவ்விய இஸ்பிரீத்துவைப் பெற்ற நாமும் சத்தியவேத ஒழுங்குகளைச் சரி வர அனுசரித்து, நமது நல்லநடத்தை யால் அவரைப் பிரசங்கம்பண்ணுவோ மாக.

— ரி. ஏ. எல்.

## மரம்நாட்டும் இயக்கம்

உணவுஉற்பத்தி சம்பந்தமாய் இவ் வாண்டின்ஐப்பசிமுதல் மார்கழிவரை யிலுள்ள கடைசிமூன்றுமாதங்களிலும் இலங்கையின் சகலபகுதிகளிலும் மரங் கள்நடும் இயக்கம்ஒன்றை நடத்துவ தென்று உணவு—கமத்தொழில் மந்திரி யார் திட்டமிட்டிருக்கின்றார். இந்த இயக்கம் இலங்கையின் ஒவ்வோர்பிரி விலும் அரசாங்க ஏசன்றர், அல்லது உதவிஏசன்றரால் பெரும்பாக கமத தொழிற் கம்மிற்றிகள்மூலம் நடத்தப் படவேண்டுமென்று ஓர்சுற்றறிக்கை கொண்டு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டப்படி, பலா, சிங்கப்பூர்ப் பலா, ஈரப்பலா, பப்பாளி, தேன் தோடை, எலுமிச்சை, மா, தென்னை, பனை, முருக்கைமுதலியவற்றை நாட்டு வதென்று முடிவுசெய்யப் பட்டிருக்கி றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

ஆனிமாதம் திரு இருதய வணக்க மாதம். திரு இருதயப் பக்தியென்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?

திவ்விய யேசு தம்முடைய திருஇருதயத்தை நேசித்து வணங்கும்படி கேட்கிறார். அர்ச். மார்கிறெற் மரியம்மாளுக்குச் சொன்னார்: "மனிதரை இவ்வளவாக நேசித்தும் அவர்களுடைய பதில் நேசத்தைப் பெறாத இந்த இருதயத்தைப் பார்" என்று.

இருதயம் நேசத்திற்கு அடையாளமாய் இருக்கின்றது. திரு இருதயமானது சருவேசுரன் எங்களை நேசிக்கிறார் என்பதற்கு அடையாளம். மனிதர் பாவஞ் செய்து தேவனுக்குத் துரோகஞ் செய்கிறார்கள். இந்தத் துரோகங்களுக்குப் பரிகாரஞ் செய்யும்படி திவ்விய யேசு உலகத்துக்கு அனுப்பப் பட்டார். மனிதர் மேலும் பாவஞ் செய்து தேவனுக்குத் துரோகஞ் செய்ததினாலே யேசுவின் இருதயம் துக்கம் நிறைந்து இருக்கிறது. சிலுவையில் அறையுண் டிருக்கும் பொழுது யேசுவின் இருதயம் ஈட்டியால் குத்தி ஊடுருவப் பட்டது.

நாம் பாவஞ் செய்தாலும் யேசு நம்மை நேசிக்கிறார். யேசுவின் திருஇருதயம் அனுபவிக்கிற துக்கத்திற்கு நாம் பரிகரிப்புச் செய்ய வேண்டும். சிறு செபங்கள் சொல்லி, ஒறுத்தல் முயற்சிகள் செய்து பரிகரிப்புச் செய்யலாம். திவ்விய பூசை கண்டு நற்கருணை உட்கொண்டு பதில்நேசம் காட்டலாம்.

ஒவ்வொரு வீட்டிலும் திரு இருதயப் படமோ, சுரூபமோ இருக்க வேண்டும். அப்போது குடும்பங்களுக்கு விசேஷ ஆசீர்வாதம் கிடைக்கும். சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## கற்பின் காவலாளி

பதின்மூன்று வயதுடைய ஓர் இளம் நங்கை. அதிக வனப்பு வாய்ந்தவள். றோமாபுரியில் உள்ள வாலிபர் யாவரும் அவளை விவாகம் செய்ய எண்ணினர். ஆனால், அவளோ எவர் விருப்பத்துக்கும் இசைந்தவள் அல்ல. "யேசுநாதர் ஒருவருக்கேநான் மணவாளியாய் இருக்க ஆசிக்கிறேன்" என்றாள்.

அவளின் வனப்பைக் கண்ட தேசாதிபதியின் மகன் அவளை விவாகஞ் செய்ய நினைத்தான். தனது தகப்பன் முன்னிலையில் அவளை வருவித்தான். தேசாதிபதி அவளைப்பார்த்து: "என் மகனை நீ விவாகம் செய்ய வேண்டும்; எங்கள் தேவருக்குப் பலி செலுத்த வேண்டும்" என்றான்.

அவளோ சற்றேனும் கிறுங்கினவள் அல்ல. "நீ இவற்றிற்குச் சம்மதியாவிடின் சாவுக்கு ஆளாகப் போகிறாய்" என்றான் தேசாதிபதி.

"நீர் என்னைக் கொல்லலாம்; ஆனால், உமதுதேவருக்குப் பலிசெலுத்தவும் மாட்டேன்; உமது மகனை விவாகஞ் செய்யவும் மாட்டேன்; யேசுநாதர் ஒருவரே என் மணவாளன்" என்றாள் சிறுபெண் அக்னேஸ். அவள் மூலம் கிறீஸ்தவர்களுக்கு ஓர்பாடம் படிப்பிக்க வேண்டும் என்று எண்ணிய தேசாதிபதி அவளுடைய தலையை வெட்டும்படி கட்டளை இட்டான். உடனே தலை வெட்டப் பட்டது. கன்னிமை முடியும், வேதசாட்சி முடியும் ஒருங்கே பெற்றுக்கொண்டு தன் பரலோக பத்தாவை நோக்கிப் பறந்து சென்றாள்.

அவளது மரணம் பலவீனமான, கோழைத்தனமுள்ள கிறீஸ்தவர்களுக்கு ஒரு படிப்பனையாயிற்று இன்று அவள் கற்பின் காவலாளியென அழைக்கப் படுகின்றாள்.

— J. M. J.

## சிந்தித்துப் பார்!

"பிரான்சீஸ்! பரலோக மாளிகையின் கதவுகள் உனக்கெனத் திறக்கப் பட் டிருக்கின்றன; பாதாளமும் உனது வருகைக்கு வாய்பிளந்து நிற்கிறது; நடுவில் நீ ஊசலாடுகிறாய்; உனக்குச் சுயசித்தம் உண்டு; இப்போதே இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்." இப்படியாகக் கருங்கல் மெத்தையில் முழந்தாளில் நின்று தனது நிர்மல நிம்மதியான தியான வேளை அர்ச். பிரான்சீஸ் சவேரியார் தமது ஆத்துமத்தை விழித்துக் கூறினார்.

அவர் சிந்தித்தார். நானும் சிந்திப்பேன்—எனது சீவியகாலமாகிய கருங்கல்லில் முழந்தாள் இட்டு, "பரலோக மாளிகையின் கதவுகள் உனக்காகத் திறக்கப்பட் டிருக்கின்றன; மறுபக்கத்தில் பாதாளமும் உன்னை ஓலமிட்டுக் கூப்பிடுகின்றது" என்று நானும் சிந்திப்பேன்.

காலம் ஒரு பொன்மேடு. அதில் அணுவுக்கு அணுவாய் இருப்பது, நமக்குக் கொடுக்கப்பட் டிருக்கும் நிமிடம் என்ற நேர அளவை. ஒவ்வொரு அணுப் பொன்னையும் பொன்னாக மதித்து அதில் நமது வாழ்வின் இலட்சியத்தைப் பொறிப்பதே நம்முடைய வாழ்வின் குறிக்கோளாக இருக்கட்டும்.

இரட்சகரது இரக்கத்தின் காலம் இது. வரப்பிரசாத ஊற்றுக்கள் நிறைந்து வரவழியின்றி அடைபட்டுத் தவித்துக்கொண டிருக்கும் நாட்கள் இவை. மனுச்சென்மத்திற்கு அனுமானமாகக் கொடுக்கப்பட்ட நாட்கள் இவை. தியானதீபமாகிய பிரான்சீஸின் சிந்தனைக் காலமல்ல இது. சிந்திக்கத் தெரிந்தவர் சிந்தை சிதறிக் கிடக்கும் சீர்கெட்டகாலம் இது. சிந்திக்கத் தெரியாத காலம்அல்ல இது. ஆனால், சிந்திக்க நேரம் இல்லாத காலம் இது.

சிந்தையுடையவனே! இப்போதாவது சிந்திக்கமாட்டாயா? இனிமேலாவது இரண்டில் ஒன்றைத் தெரிந்து கொள்ள மாட்டாயா?

சிந்தி! சிந்தி! சிந்தித்துப் பார்!

— எஸ். மரியாம்பிள்ளை

## நான் குருவானால்...

அர்ச். ஜோண் பொஸ்கோ தமக்குப் பத்துவயது ஆகுமுன்னரே தம்மைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து அவருடைய ஊழியத்தில் தம்மைமுழுதும் செலவழிக்கக் குருப்பட்டம்பெற வேணுமென்று ஆசைகொண் டிருந்தார். அவர் ஆராவது ஒருகுருவானவரைக் கண்டால் ஓடிச்சென்று அவருக்குத் தோத்திரம் சொல்லி, அவர் பிறகே சற்றுத்தூரம் செல்லுவார். குருவானவர் தம்மைக் கவனியாமல் அப்புறம் சென்றால் விசனத்துடன் வீடுதிரும்புவார்.

ஒருநாள் ஜோண்பொஸ்கோ ஒரு குருவானவர் வெகுதூரத்தில் வரக் கண்டு ஓடிச்சென்று அவருக்குத் தோத்திரம் சொன்னார். அப்போது அந்தக் குருவானவர் அவரைச்சட்டை பண்ணாது தம்வழியே சென்றார். இது அவருக்குத் தாங்கமுடியாத துக்கத்தைக் கொடுத்தது. உடனே வீட்டிற்குச்சென்று தமதுதாயிடம் நடந்த விஷயத்தைக்கூறி அழஆரம்பித்தார்.

தாய்: மகனே, அவர் என்ன செய்யவேண்டும் என்கிறாய்? அவர் ஒரு நல்ல குருவானவர். அவர் மனம் முழுவதும் கல்வியிலும், மேலான யோசனையிலும் சென்றிருக்கும். உன்னைப்போன்ற சிறுவருடன் பேச அவருக்கு நேரம் கிடைக்குமா?

மகன்: என்ன அம்மா, என்னோடு ஒருநிமிஷம் நேசவார்த்தைகள் பேச அவரால் முடியாதா?

தாய்: அவர் உனக்கு என்னசொல்லக்கூடும்? நீ இவ்வளவு சிறியவனாய் இருக்கிறாயே. அவர் பேசுவதை உன்னால் கண்டுபிடிக்கக் கூடுமா?

மகன்: அம்மா, என்னால் கூடும். அவர்மாத்திரம் என்னிடம் ஏதாகிலும் நேசவார்த்தைகள் சொல்லட்டும். நிச்சயமாய் நான் கண்டுபிடிப்பேன்.

தாய்: சரிதான், மகனே! ஆனால், அவருக்கு எவ்வளவு வேலை இருக்கிறது. பூசை செய்ய வேண்டும், பாவசங்கீர்த்தனம் கேட்கவேண்டும். பிரசங்கம் தயார்செய்ய வேண்டும். இவை மாத்திரமா, அவருக்குத் தமது விசாரணைப்பங்கைச் சேர்ந்த பல கவலைகளும் இருக்கும்.

மகன்: சிறுவர்களும் அவர் விசாரணைப்பங்கைச் சேர்ந்தவர்கள் தானே. அவர் எங்களையும் பாதுகாக்க வேண்டாமா?

தாய்: மெய்தான் கண்ணே! ஆனால், அவருக்கு நேரம் இல்லையே அப்பா. எப்படி உன்னோடு வீணகாலம் போக்குவது?

மகன்: என்னோடு பேசுவது வீண்காலமா? அப்படியானால், நமது ஆண்டவர் சிறுவர்களை ஆசீர்வதித்து அவர்களுடன் பேசிக்கொண் டிருந்தபோது வீண்காலந்தான் போக்கினாரா?

தாய்: ஆம், நீ சொல்லுவது நியாயந்தான் என்றுசொல்லி வேறு யாதேனும் சொல்லத் தோன்றாது திகைத்த போது ...

மகன்: "நான் மட்டும் ஒருநாள் குருவானால் சிறுபிள்ளைகளுக்காக என் உயிரை விடுவேன். சிறுவர்களை என்னிடம் அழைத்து அவர்களை நேசிப்பேன். அவர்களும் என்னை நேசிக்கும்படி செய்வேன். அவர்களுக்கு நற்புத்தி புகட்டி அவர்களுக்கு உதவி செய்து அவர்களுடைய ஆத்துமங்களின் இரட்சணியத்திற்குக் காரணமாய் இருப்பேன்" என்று பிள்ளைக்குரிய பிடிவாதத்துடன் கூறினார்.

அவரும் ஓர் குருவானார்—சிறுவர்களுக்காக—ஏழைச்சிறுவர்களுக்காக—அநாதசிறுவர்களுக்காகத் தம்உயிரைச் செலவழித்தார். ஏழைகளின் அழுகைக்குரலைக் கேட்டார். அவர்கள் துன்பத்தை நீக்கினார்.

— ஜே. ஏ. ஜி.

## வேண்டும்

'ஜெயம்'

1

நல்ல காற்று நல்ல பானம்
நல்ல ஒளியும் வேண்டும்
நல்ல உணவு நல்ல உடைகள்
நல்ல மகிழ்ச்சி வேண்டும்

2

நல்ல மனது நல்ல கிரிகை
நல்ல நினைவு வேண்டும்
நல்ல கல்வி நல்ல செல்வம்
நல்ல அறிவு வேண்டும்

3

நல்ல கருணை நல்ல பொறுமை
நல்ல சொல்லு வேண்டும்
நல்ல நேர்மை நல்ல சேவை
நல்ல நட்பு வேண்டும்

4

நல்ல துணிவு நல்ல பணிவு
நல்ல கனிவு வேண்டும்
நல்ல பக்தி நல்ல வாழ்வு
நல்ல மரணம் வேண்டும்

## என்னை நேசிக்கிறவன்

"என்னை ஒருவன் நேசித்தால், என் கற்பனைகளை அனுசரிப்பான். அப்பொழுது என்பிதா அவனை நேசிப்பார். நாங்கள் அவனிடம் வந்து தங்குவோம்."

தேவ வரப்பிரசாதத்துடன் இருக்கிறவர்கள் தேவனின் ஆலயம்; பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்து அவர்களின் உள்ளத்தில் வீற்றிருக்கிறார் என்பது மேற்கூறியவற்றின் கருத்து. இதை எமக்கு அருளியவர் யேசு.

தேற்றரவாளராகியவர் வந்தபின் உங்களுக்கு எல்லாவற்றையும் படிப்பித்து உணர்ச்சி யூட்டுவார். நான் மோட்சம் சென்று இஸ்பிரீத்துவை அனுப்பும்படி பிதாவைக் கேட்பேன் என்று யேசு சொன்னார்.

இஸ்பிரீத்துசாந்து அப்போஸ்தலர் மேலும், ஆதித் திருச்சபையின்மேலும் இறங்கியதை நினைவூட்டும் திருநாள் அடுத்த ஞாயிற்றுக்கிழமை. பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குத் தமது ஞானம் ஆதியாம் கொடைகளைத் தரும்படி கேளுங்கள்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதோஷம் குலநாசம்!

நான் ஒரு சம்மனசானவரையும், ஒரு குருவானவரையும் ஒரேமுறையில் சந்திப்பேனாகில், முதலில் குருவானவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் பிறகுதான் சம்மனசானவரைப் பற்றி நினைப்பேன். அர்ச். பிரான்சீஸ்கும், அர்ச். பெரியதெரேசம்மாளும் சொல்லுவது இது. ஏனெனில், சம்மனசானவருக்கு ஒருபாவியின் பாவத்தைப் போக்கவும், திவ்விய நற்கருணையைத் தொடவும், காத்தில் ஏந்தவும் அதிகாரம் இல்லை.

குருமாருக்கோ, "நீங்கள் யாருடைய பாவங்களைப் பொறுப்பீர்களோ அவர்களுக்குப் பொறுக்கப்படும். யாருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ அவர்களுக்குப் பரலோகத்திலும் மன்னிக்கப்படாது" என்று நமது ஆண்டவர் அளித்த அதிகாரமும், நற்கருணை முதலிய தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றும்படி கொடுத்த அதிகாரமும் உண்டு. ஆதலால், யோசியுங்கள், யார்பெரியவர்? இன்னும் கேளுங்கள்.

"தேவர்கள்மேல் புளுகாதே" என்று இஸ்பிரீத்துசாந்து வேதத்தில் திருவுளம்பற்றுகிறார். குருமார் யேசுநாதரின் பதிலாளிகள். ஆதலால் இஸ்பிரீத்துசாந்து அவர்களைத் தேவர்களென்று அழைத்து அவர்களை மிகவும் சங்கிக்க வேண்டுமென்று காட்டுகிறார்.

குருஎன்னும் பதமானது கு. ரு. எனப் பிரிபடும்போது 'கு' என்பது உலகம் எனவும், 'ரு' என்பது ஒளி எனவும் பொருள்படும். எனவே, குரு என்னும் மொழி உலகின் ஒளி எனப் பொருள்படும். அதுவே உலகின் அஞ்ஞானஇருளை ஓட்டும்ஒளி.

"உலகிற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" (மத். 5: 14.)

"பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" (மத். 13: 5.) என்றும் வேதாகமங்களிற் கூறப்பட்டிருக்கிறது. இவைகளிலிருந்து நாம் குருமாரின் மகிமையை விளங்கக்கூடும் அல்லவா?

இன்னும், இவர்கள் பரித்தியாகிகள். ஆம். தங்கள் அருமைப் பெற்றோரைப் பிரிந்து, நாட்டினைத் துறந்து, பந்துமித்திரரை மறந்து, ஆஸ்தி பாஸ்திகளைக் கைநெகிழ்ந்து, தன்னலம் கருதாது, பிறாத்தும ஈடேற்றத்தையே சிரமேற்கொண்டு தேவனுக்காகத் தங்கள் சுயபெருமை, மகிமைகளைக்கூட இழக்க நேரிடினும் பின்வாங்காது அல்லும்பகலும் அயராது உழைத்துவருபவர்களை வேறு எப்பெயரால் அழைக்கலாம்?

கிறீஸ்துவமக்களாகிய நாம் இவ்வுலகில் பிறந்தநாட்தொட்டு இறக்கும்வரை இப்பரித்தியாகிகளின் பராமரிப்பில் வாழாதிருந்தால் எமது ஆத்துமங்களின்கதி யாதாகும்?

இன்னும் விசேஷமாக நாம் நமது மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டியது ஒன்றுண்டு. அதாவது இவர்கள் பரித்தியாகிகளாதலால்—முற்றுந்துறந்த முனிவர்களாதலால், இவ்வுலகிலுள்ள எதுவும் எந்தவிதத்திலும் இவர்களைத் தாக்கவோ, பயமுறுத்தவோ, துன்புறுத்தவோ, நிலைகுலைக்கவோ முடியாது. துன்பமும், இன்பமும் அவர்களுக்கு ஒன்றுதான். பெருமையும் சிறுமையும் அவர்களுக்கு ஒரே தன்மைதான். இங்கும், அங்கும் அவர்களுக்கு வித்தியாசமில்லை. சுருங்கக் கூறின், முற்றறத்துறந்த இவர்களுக்கு உரிமையானது எதுவும் இவ்வுலகில் குறிப்பிடுவதற்கில்லை. ஆயின் முழுஉலகமுமே இவர்களுக்குச் சொந்தம். இதனைநாம் உணர்வதில்லை. இவர்கள் ஓரிடத்திலிருந்து துரத்தப்பட்டால் உடனே இப்பரந்த உலகத்தில் இன்னொரு இடம் அவர்களுக்கெனக் காத்திருக்கும். சந்தோஷத்தோடு அவ்விடத்தை அடைவார்கள். ஆனால், அங்கும் அவர்களுக்குச் சுதந்திரந்தான். கடவுளின் ஊழியர்தான் இங்குபோல் எங்கும். ஆனால், நாம் இவைகளை நினைப்பதில்லை. நடப்பதென்ன?

ஒருகுருவானவர் ஒருவேளை அறிந்தோஅறியாமலோ யாதேனும் தவறுசெய்துவிடுவாரானால் அல்லது தங்கள் இஷ்டப்படி நடக்கத்தவறுவாரானால், அல்லது ஒருகருமத்தில் தங்கள்இஷ்டப்படி தீர்ப்புச்செய்யாமல் நீதியின்படி நடப்பாரானால், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் "நன்றிமறப்பது நன்றன்று, நன்றல்ல தன்றே மறப்பது நன்று" என்னும் முதுமொழிக்கு முற்றும்மாறாக அவர்களின் நன்மைப்பெருமைகளை உடனே மறந்து, சினந்து, என்ன, இவர்ஒருசார்பாகப் பேசுகிறார்; இவர்வந்து ஊரை இரண்டுபடுத்துகிறார்; ஊர்விஷயங்களைக் கவனிக்கிறாரில்லை; இவர் முறையின்றி நடந்தால் நாங்கள்எப்படிச் சரியாகவாழலாம்? இவர்தொலைந்தால்தான் ஊர் நலமடையும்என்று பலகுறைகளை அடுக்கியும், துரும்பைத் தூணாக்கியும், அணுவை மலையாக்கியும், ஒன்றை ஒன்பதாகப் பெருக்கியும், இல்லாததை உண்டென்று சாதித்தும் வாயில்வந்தவாறு தூற்றுகிறார்கள்.

தேவநீதி ஆறஅமரவரும். இடைவழியில் தங்கிவிடாது என்பதை இவர்கள் அறியவேண்டும். கேடுவருமுன் இவர்களின்மதி கெட்டுவிட்டதுபோலும். பூர்வத்தில் மோயீசனைக் குறைகூறிய மரியாயி குஷ்டவியாதியாலும், எலிசேயுஸ் தீர்க்கதரிசியை மொட்டையனென்ற சிறுவர் கரடியாலும் இறந்தனரென்று வேதம் கூறுகிறதல்லவா? அறியாமற்செய்த அப்பெண்பிள்ளைக்கும், புத்திவிபரமறியாத பிள்ளைகளுக்கும் அவ்விதஆக்கினை வந்தால், சகலமும்தெரிந்தும் வேண்டுமென்று கல்விச்செருக்காலும், பணப்பெருக்காலும் மமதைகொண்டு குருநிந்தை செய்பவர்களுக்கு எப்பேர்ப்பட்டஆக்கினை வரக்கூடுமென்பதை அவர்கள் உணராதிருப்பது என்னமதியீனம்?

"குருதோஷம் குலநாசம்" என்றபடி குருமாருக்குவிரோதமாக வாதுபேசி அவர்களை மனம்நோகப் பண்ணியவர்களுக்கு வந்துள்ள கேட்டையும், அவர்களின்குடும்பங்கள் பட்டபாட்டையும் கண்டும் கேட்டுமிருந்தும் இத்தீயகுணத்தை விடாதிருத்தல் எவ்வளவுபரிதாபம்! அழிவுகாலம் வரும்போதுதான் இவ்விதவிபரீதபுத்தி தோன்றும். ஆகையால், தேவகோபத்திற்கும், சாபத்திற்கும் ஆளாகாமல் கிறீஸ்தவர்கள் யாவரும் பிள்ளைகளுக்குரிய பற்றுதலோடு குருமாரைநேசித்துச் சங்கித்து அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். அவர்கள்மட்டில் நமக்குள்ள அன்பையும், அபிமானத்தையும் வார்த்தையினால் மாத்திரமல்ல, கிரிகையினாலும் காண்பிக்கவேண்டும் "அன்பின் அத்தாட்சி கிரிகையின்காட்சி"

— எம். ஏ. பிள்ளை

## கண்டறியுங்கள்

1. கடவுளில் உண்டு;
மனிதனில் இல்லை.
2. ஆண்டில் உண்டு;
மாதத்தில் இல்லை.
3. மடுவில் உண்டு;
குளத்தில் இல்லை.
4. தம்பியில் உண்டு;
தமையனில் இல்லை.
5. அடியில் உண்டு;
அந்தலத்தில் இல்லை.
6. யுத்தத்தில் உண்டு;
சமாதானத்தில் இல்லை.
7. திங்களில் உண்டு;
செவ்வாயில் இல்லை.
8. கள்வனில் உண்டு;
நல்லவனில் இல்லை.
9. கேள்வியில் உண்டு;
விடையில் இல்லை.

(விடை: [illegible])

சே. யேசுதாசன்
மண்டைதீவு.

# இயற்கையின் போதனை

பசுமை நிறமுடைய வயல்கள். அவற்றின் அருகே சலசலவென்று ஓடும் அருவி. அருகே நிற்கிறது ஓர் மகிழமரம். அதன் வேரிலே அமர்ந்துகொண்டு கண்களை ஒருமுறை சுழற்றினால், இயற்கையின் வனப்பு மிகுந்த காட்சி தரும். அக்காட்சி எமக்கு என்ன உணர்ச்சியைக் கொடுக்கிறது.

பசுமை பொங்கும் வயல்கள் இறைவனின் ஆச்சரியமான செயல்களைக் காட்டுகின்றன. வானோங்கி வளர்ந்த மரங்கள் அவரின் அன்பை எடுத்துக் காட்டுகின்றன. அவருடைய பூரண கிருபையைத் தமது உயரத்தினால் அறிவுறுத்துகின்றன. பாய்ந்துசெல்லும்அருவி பக்தர்களின் பக்தியைக் காட்டுகிறது. மலையின் மேலிருந்து விழும் தண்ணீர் கடலை அடையப் பாடுபடுகிறது. அதேபோன்றுதான் மானிடராகிய நாமும் அன்பின் கடலான இறைவனை அடையப் பாடுபடுகிறோம். தாழ்ந்த இடங்களைப் படிப்படியாக நாடிப் போவதனால் அன்றோ அருவி கடலை அடைகிறது. அப்படிப்போவது சரியல்ல என்று எண்ணி மேலான இடங்களில் ஏற முயற்சித்தால் அது ஒருநாளும் தான் போக விரும்பும் இடத்தை அடையமாட்டாது. நாமும் தாழ்மையான உள்ளத்துடன் எம்மைத் தாழ்த்தினால் கடவுளை அடையலாம்.

அரும்புகளும், மலர்களும் எமக்கு ஒரு அழகான பாடத்தை உணர்த்துகின்றன. ஒரு மலராத மொட்டை எடுத்து நாம் பூவாக விரிப்போமானால் அது அறிவற்ற செய்கையாகும். ஏனெனில் அதனுடைய இயற்கை மலர்ச்சியைக் கெடுத்துவிடுகிறோம். அரும்பு தன் போக்கிலே மலர்வதனால் அழகான பூவாகத் திகழ்கிறது. எமது சீவியமாகிய அரும்பு கடவுளுடைய இஷ்டப்படி மலர்ந்தால் அது ஒரு அழகான மலர்தான். அது சரியல்ல என்று நாம் எம்முடைய எண்ணப்படி விரியச் செய்வோமானால் அதில் இயற்கையான மலர்ச்சியும், அழகும் காணப்படமாட்டா.

இயற்கை எழிலுக்கு ஒருஅம்சமாக இருக்கும் பட்சி சாலங்களைப் பார்ப்போம். காலையில் எழுந்து இறைவனை நோக்கிப் பாடுகின்றன. தங்களது நாளாந்த வாழ்க்கையைத் தொடங்குமுன் தங்களைப் படைத்த ஈசனைத் தங்கள்பாஷைகளில் துதிக்கின்றன. பகுத்தறிவற்ற பிராணிகளான பறவைகள் எமக்குக் கற்பிக்கும் பாடம், "காலையில் இறைவனைத் துதிப்பாயாக" என்பதே.

"தீமைக்கு நன்மை செய்" என்று தம்மை வெட்டுபவர்களை வெய்யிலில் நின்றும் காப்பாற்றி நிழலை ஈந்து எமக்கு மரங்கள் தங்கள் செயல்களினால் உணர்த்துகின்றன.

இவ்வளவு அழகான இயற்கையைப் படைத்த கடவுளின் உன்னத சிருஷ்டிகளும் தங்கள் செயல்களில் வெளிப்படுத்துகின்றன. கடவுளின் உன்னத சிருஷ்டியான மனிதனைப்போல் இயற்கையும் கடவுளைப் புறக்கணித்தால் நாம் இத்தகைய எழில் மிக்க வனப்பைக் காண முடியுமா?

(உ. தா.)

# செவ்வாய்க் கிரகம்

செவ்வாய்க்கிரகம் 1914-ம் ஆண்டிலும்பார்க்க இந்தஆனிமாதம் 2-ந்திகதியன்று பூமிக்கு அதிகஞ்சமீபத்தில் — அதாவது நாலுகோடிமைல்தூரத்தில் வரவிருப்பதைக் கண்டறிந்ததே உலகமுழுவதிலுமுள்ள வானசாஸ்திரிகள் இந்தமாயக்கிரகத்திலுள்ள சிலஇரகசியங்களைக் கண்டறிவதில் ஈடுபடலானார்கள். அவற்றிலே, "அதில் மலைகள் இருக்கின்றனவா? இல்லையானால் ஏன் இல்லை" என்பதும் ஒன்றாகும். இது விஷயமாய் உலகில்முதன்மைவாய்ந்த பத்தொன்பது ஆகாயமண்டல அவதான நிலையங்கள் — விசேஷமாய்த் தென்னாபிரிக்காவிலே புளொம்பொன்ரீன் அவதானநிலையம் விசேஷசிரத்தை எடுத்துவந்திருக்கின்றன. செவ்வாய்க் கிரகத்திலே வனாந்தரங்கள்இருக்கின்றனஎன்பதை விஞ்ஞானிகளில் பெரும்பாலானோர் ஒப்புக்கொள்ளுகின்றனர். அதிலே முகில்கள் இருப்பதையும், தண்ணீர் குறைவாயிருப்பதையும் அவதானித்திருக்கின்றனர். ஆனால், அதிலே மலைகள்உண்டா என்பதையிட்டுத்தான் முடிவுகட்டவியலாது மலைத்துநிற்கின்றார்கள்.

## அறிவுச் சுடர்

1. மிகப்பெரிய கிரகம்எது?
வியாழன்

2. கடல்நீரிலும் ஐந்து மடங்கு உவர்நீரைக்கொண்ட கடல்எது?
சவக்கடல்

3. அர்ச்சியசிஷ்டர்களில் அதிகம்பாரிய குடும்பங்களில்பிறந்த இருவரின் நாமங்கள்எவை?

(1) சியன்னாநகர் அர்ச். கத்தறீனம்மாள். இவள் ஓர்குடும்பத்தில் பிறந்த 23பிள்ளைகளில் 21-வதுபிள்ளை.

(2) அர்ச். சிலுவை அருளப்பர். இவர் ஓர்குடும்பத்தில் பிறந்த 16பிள்ளைகளில் ஒருவர்.

4. உலகில் மிகப்பெரிய மணிக்கூடு எங்கே உள்ளது?

கனடாதேச மொண்றியல் நகரில் உள்ளது. இதன் நேரங்காட்டும்தட்டு லண்டனிலுள்ள பிக்பென் மணிக்கூட்டின் தட்டிலும் ஆறுமடங்கு பெரியது. இதற்கு மூன்றுமுகப்புறங்கள் உண்டு. இவற்றிலே ஒவ்வொன்றினதும் குறுக்களவு 60 அடி. இதன் யந்திரத்தின்நிறை 6 தொன். நிமிஷங்காட்டும் இலக்கங்களுக்கிடையிலுள்ள தூரம் மூன்றுஅடி. நிமிஷக்கம்பியின்நீளம் 30 அடி. நிறை 2,500றாத்தல். ஒருஆண்டிலே நிமிஷக்கம்பி சுற்றிவருந்தூரம் 312 மைலுக்குச் சரியாகும்.

5. ஐரோப்பாவின் மிகப்பெரிய எரிமலையாது?

எற்னாஎன்னும் எரிமலையே. இது இத்தாலியின் தென்மேற்குப் புறமாயுள்ள சிசிலிதீவில் இருக்கின்றது. இதன்உயரம் 10,758 அடி. சுற்றளவு 91 மைல்.

6. ஒருசோடு முயல்களின் சந்ததி மூன்றுவருடகாலத்தில் எவ்வளவாகப் பெருகும?

1 கோடியே 37 லட்சத்து 18ஆயிரம் முயல்களாகப் பெருகும்.

7. நடுத்தரமான ஒரு கொட்மீன் ஒருமுறையில் எத்தனை முட்டைகள் இடுகின்றது?

70 லட்சம்முட்டைகள் இடுகின்றது.

8. ஒருவண்ணாத்திப் பூச்சியிலிருந்து மூன்றுவருடகாலத்தில் எத்தனை வண்ணாத்திப்பூச்சிகள் தோன்றும்?

100 கோடி வண்ணாத்திப்பூச்சிகள் தோன்றும்.


9. ஒருசோடு யானையிலிருந்து சந்ததி பெருகிக்கொண்டு போனால் 750 வருடத்தில் எத்தனையானைகள் தோன்றும்?

10 லட்சம் யானைகள்தோன்றும்.

10. கருதினால்மாருளெல்லாம் அதிவிருத்தாப்பிய கருதினால்யார்?

றோமாபுரியிலே அர்ச். பேதுறேஜர் மகாலயத்தின் அத்தியட்ச குருவான கருதினால்வேர்தே ஆண்டவரே திருச்சபைக் கருதினால்மாருளெல்லாம் அதிகம்விருத்தாப்பியாவர். இவர்சமீபத்திலே தமது 90-ம் வயதில் பிரவேசித்திருக்கிறார். அதிகம்விருத்தாப்பியாய் இருந்தபோதிலும் இவர் தாம் சேர்ந்துள்ள நான்கு திருச்சங்கங்களினதும் கூட்டங்களுக்கெல்லாம் தவறாது சமுகமளித்து வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்ஷூரன்ஸ் ஆசாமிகள் இல்லாது போயிருந்தால்

வெகு சொற்பமானவர்களே ஆயுள் அஷ்யூரன்ஸ் பொலிஸிதாரராக இருக்கக்கூடும். ஆயிரக்கணக்கான விதவைகளும், அநாதைக் குழந்தைகளும் திக்கதியாகப் பரிதவிக்கக்கூடிய நிலைமையிலிருப்பர் உங்கள் குடும்பத்திற்கு உடனடியாகப் பாதுகாப்புத் தேடிக் கொள்வதற்கு ஆயுள் அஷ்யூரன்ஸே நிச்சயமான வழியாகவிருப்பினும், ஆயுள் பொலிஸிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இன்ஸ்யூரன்ஸ் கந்தோர்கள் முன்புக்கு நீண்ட வரிசைகளில் ஜனங்கள் நின்றுகொண்டிருக்கவில்லை காரணம் ஆயுள் அஷ்யூரன்ஸ் வாங்கப்படுவதல்ல, ஆனால் விற்கப்படுவதே.

இது எளிதில் ஊகிக்கக்கூடியது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் பூரண ஆயுள் காலம் ஜீவிக்க முடியுமென்றே எதிர்பார்க்கிறான். எதிர்காலத்தில் அளவில்லாத நம்பிக்கையுள்ளவனைப் பிற்காலத்திற்கெனப் பாதுகாப்புத் தேடுவதை ஒத்தி போடுகிறான். ஏதாவது அபாயம் நேருவதானால், தனக்கல்ல, அயலான் ஒருவனுக்கே அவ்வாறு நேருமென நினைக்கிறான். எனினும், நாம் நினைப்பதுபோல் நன்மையே எப்பொழுதும் நேருவதில்லை. எனவே ஒரு மனிதன் மனைவி, குழந்தைகளின் நலனைப் பொறுத்த மட்டில் இன்ஸ்யூரன்ஸ் ஏஜெண்டுகள் இருப்பது பெரிய அதிர்ஷ்டம். இந்த ஏஜெண்டுகள் ஒருவரின் விருப்பையோ, வெறுப்பையோ பொருட்படுத்தாது உதவி புரியும் உண்மைநண்பர்களாக விளங்குகின்றனர்.

## சிலோன் இன்ஷூரன்ஸ்

**கம்பெனி லிமிட்டெட்,**

தலைமை ஆபீஸ் :

**69, இராணி வீதி — கொழும்பு.**

**Ceylon Iusurance Co. Ltd., 69, Queen St., Colombo**

## ஏத்துக்காலின் திருநாட்கள்

நீர்கொழும்புப்பிரிவிலே ஏத்துக்கால் என்னும் சிறுகிராமத்தில் அர்ச். சில்வேஸ்திரி முனிவர்போரால் ஓர்கோவில் உண்டு. இதிலே வருடம்தோறும் வைகாசிமாதத்தில் வழக்கமாகத் திரு இருதயஆண்டவர், அர்ச். சூசையப்பர், தேவதாயார்பேரால் திருநாட்கள் கொண்டாடப்படுகின்றன. இம்முறையும் இவற்றைக்கொண்டாடுமாறு வண. பிரான்சீஸ் குரொஸ்சுவாமியவர்கள் இங்கு விஜயஞ்செய்தார். 9 5-54 ஞாயிறுவாரம் திருஇருதயத்திருநாளைக் கொண்டாடுமுகமாகத் திருஇருதயச்சபையார் தங்கள்சபைக்குரிய சின்னம் அணிந்து இருதயக்கொடிகாத்தேந்திக் கீதங்கள்பாடிக்கொண்டு கோயிலைச்சேரவே சுவாமிஅவர்கள் பாடற்பூசை நிறைவேற்றித் திருஇருதயத்திற்குச் செய்யப்படும் நிந்தைஅநாசாரங்களுக்குப் பரிகாரம்செய்வதற்காகத் திவ்வியகருணையை எழுந்தேற்றஞ் செய்துவைத்தார். பாடசாலைச்சிறுரும், சபையோரும், பிறரும் முறைமுறையாகச்சென்று சற்பிரசாதநாதருக்கு நிந்தைப்பரிகாரம்செய்தார்கள்.

அடுத்தபடியாகச் சூசைமாதவனின் திருநாளைமுன்னிட்டு அழகுறச்சிங்காரிக்கப்பட்டிருந்த கோயிலிலே நாலு தினங்களாக மாலைவேளை ஆராதனை நடைபெற்றது. சனிக்கிழமை, வேஸ்பர் பாடப்பட்டது. 16-ந்திகதிஞாயிற்றுக்கிழமை சிறியோரும், பெரியோருமாகத்திரளானோர் குழுமியிருக்கச்சுவாமியவர்கள் திருநாள்பாடற்பூசை நிறைவேற்றி: "அர்ச். சூசையிடம் போங்கள்" என்பதைப் பீடிகையாகக் கொண்டு தேன்மாரிபொழிந்தாற்போல் ஓர்பிரசங்கஞ்செய்தார். பிற்பகல் 4மணியளவில் சிங்காரிக்கப்பெற்ற வீதிவழியே பாடசாலைச்சிறுவரும், ஏனையோரும் வரிசையாகச் செபமாலை ஓதிக்கொண்டும், கீதங்கள் பாடிக்கொண்டும் செல்லச் சூசைமாதவனின் திருச்சுரூபம் பத்திச்சிறப்பாகச் சுற்றுப்பிரகாரமாய்க் கொண்டுசெல்லப்பட்டது.

22-ந்திகதிசனிவாரம் தேவதாயாரின் வணக்கமாதத்திருநாள் ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது. அன்று பாடசாலைச்சிறார்க்குப் புதுநன்மையும் வழங்கப்பட்டது. ஈற்றில் புதுநன்மை பெற்ற சிறுரும், சுவாமியவர்களும் அடங்கிய ஓர்புகைப்படம் பிடிக்கப்பட்டுத் திருநாட்கள்இனிதே பூர்த்தியடைந்தன.

[illegible]


**SOLOELLE PIANO**

**FOR SALE**

**AMERICAN MAKE**

**IRON FRAME GOOD ORDER**

**LANKA MUSICAL WORKS**

No. 36, Main Street,

JAFFNA.


## ஆனி மாதம்

போதுக்கருத்து :— பாவச்சுமையின்கீழ் வருந்துவோர் யேசுவின் திருஇருதயத்தினிடம் இரக்கமும், இரட்சணியமும் தேடும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து :— கத்தோலிக்க உலகமுழுவதும் சீனுவில் வேதகலாபனையால்வருந்தும் திருச்சபையோடு தனக்குள்ள ஐக்கியத்தைத் தீரஉணரும்படியாய் மன்றாடிக்கொள்வது.

## பாடசாலைத் திறப்புவிழா

புங்குடுதீவுக் கத்தோலிக்க பாடசாலைப் புதியகட்டத் திறப்புவிழா சென்ற 21-5-54 வெள்ளிக்கிழமை பிற்பகல் வண. கட்டளைக்குரவர் தலைமையில் விமரிசையாக நடைபெறலாயிற்று. பாடசாலையில் கூடியிருந்த திரளானமக்கள் வரிசையாகக் குரவர் மனைசென்று அவரை மகிழ்வுடன் அழைத்துவரவே, பாடசாலைத் தலைமையாசிரியர் பண்டிதர் எம். கே. அருட்பிரகாசம்அவர்கள் பாடசாலைவாயிலில் குரவருக்கு மலர்மாலைசூட்டிச் சிறு சொற்பொழிவொன்றால் அவரைவரவேற்றுநின்றார். அதன்மேல்அவர் உட்செல்ல, அவரைத்தொடர்ந்துவெளியே குழுமியிருந்த மக்களும்சென்று அங்கு காட்சக்குவைக்கப்பட்டிருந்த விநோதப்பொருட்களைப் பார்த்தபின் ஆசனங்களில்அமர்ந்தனர். குரவரையும், மற்றும் பெரியோர்களையும் வரவேற்றுப் பிள்ளைகள் இனியகீதங்கள் பாடினர். சின்னஞ்சிறு மாணவிகள் ஐவரின் ஆடல்பாடல்களைக்கண்ணுற்ற அனைவரும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்தினர். இன்னும்பல மாணவிகளின் இனிய கீதங்களும், பிறவும் சபையோரை மகிழச்செய்தன. மி. திரேசம்மா என்னும்மாணவி: "நமதுபாடசாலை எவ்வாறுமுன்னேறியது" என்பதுபற்றி விரிவாகக்கூறிநிற்க, மாணவன் சு. யோசேப் பாடசாலைக்கு உதவிசெய்த சகல பெற்றோருக்கும், மற்றும்சகலஅன்பர்களுக்கும் நன்றியுரைகூறி நின்றார். தலைமையாசிரியர் பேசியபோது, தாம் கேட்டதற்கெல்லாம் மனஞ்சலியாது இசைந்துகொடுத்த கட்டளைக்குரவர்க்கும், கட்டடத்திற்காகப் பாடுபட்ட சகலபெற்றோருக்கும், உடன்ஆசிரியர்கட்கும் நன்றியுரைகூறினர். சுகாதார பரிசோதகர் திரு. சவுந்தரராசா பேசுகையில், மழலைப்பருவம்மாறுத பிள்ளைகளின் ஆடல்பாடலும், அவர்களின் திறமையுமே அவ்விழாவைச் சிறப்பித்தன எனக்கூறினர். கடைசியாக வண. கட்டளைக்குரவர் சகலருக்கும் மனமார்ந்த நன்றிதெரிவித்ததும்சிற்றுண்டி வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவேறியது.

— நிருபர்

### நன்றியறிந்த தோத்திரங்கள்

திவ்விய பாலகயேசு எனது மன்றாட்டைக் கேட்டுத் திருவருள்புரிந்தபடியால் நேர்த்தியின்நிமித்தம் இதைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் B. S. T.

அர்ச். செபமாலைமாதாவின் வேண்டுதலால் எனது ஆபத்தான வருத்தங்களும், சகலஇக்கட்டுகளும் பரிதிமுன்பனிபோல் அகன்றதினால் நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் B. S. T.

அற்புதவரத்தியாகிய சதாசகாயமாதாவின் உதவியால் எனது சகல நோய்பிணிகளும், இக்கட்டுகளும் விலகினபடியால் நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் B. S. T.

## உதிர்ந்த மலர்கள்

மெக்சிக்கோவிலே 1926-ம் ஆண்டு வேதகலகம் நடந்தபோது ஆங்கிலேய குருவானவர் ஒருவர் அங்குசெல்ல நேரிட்டது. ஒருநாள் நான்கு வாலிபரை அநேகசேவகர்சூழ்ந்து சிறைக்கு இழுத்துப்போவதை அவர்கண்டார். நால்வரும் கத்தோலிக்கர். அவர்களின் உடைகள் கிழிக்கப்பட்டிருந்தன. தலையிலும் முகத்திலும் ஏற்பட்ட காயங்களிலிருந்து இரத்தம் வடிந்தது. எனினும் அவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். கையில் செபமாலை இருந்தது. நாலுஅடிக்கு ஒருமுறை "கிறீஸ்துஇராஜா நீடூழிவாழ்க!" எனக் கூவிக்கொண்டு போனார்கள். அவர்களுக்கு பின் என்ன நேரிட்டதோ தெரியாது. ஆனால், அவர் தம்நாடுதிரும்பியதும் தாம்கட்டியெழுப்பிய புதியகோவிலைக் கிறீஸ்து இராசாவுக்கு அர்ப்பணம் செய்தார்.

*　*　*

சம்மனசுகளுக்குரிய பொறுமையுடன் ஒரு கன்னியாஸ்திரி ஓர் நோயாளியைக் கண்காணித்து வந்ததைக் கண்ட அவிசுவாசி ஒருவன்: "சகோதரி, எனக்கு நாளொன்றுக்கு நூறு ரூபா கொடுத்தாலும் அந்த நோயாளியைக் கண்காணிக்க மாட்டேன்" என்றான். "ஐந்நூறுரூபா கொடுத்தாலும் நான் அவனைக் கண்காணிக்க மாட்டேன்; ஆனால் நான் கிறீஸ்துநாதருக்காக இந்த வேலையைச் செய்து வருகிறேன்" என்று கன்னியாஸ்திரி கூறினாள்.

*　*　*

ஸ்பெயினிலே உள்நாட்டு யுத்தம் நடந்தபோது ஒரு குருவானவரைக் கொல்லும்படி குழப்பக்காரர் அழைத்துச் சென்றனர். அவருடைய கைகளைக் கட்டியிருந்தனர். "கட்டைத் தயவு செய்து அவிழ்த்து விடுங்கள்; நான் சாகுமுன் உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறேன்" என்றார் அவர். பொதுஉடைமையன் ஒருவன் கயிற்றை அறுத்ததோடு அவருடைய இரு கைகளையும் வெட்டிவிட்டான். இரத்தம்படிந்த கரங்களால் அவர் சாகும்வரை அவர்களை ஆசீர்வதித்துக்கொண்டிருந்தார்.

*　*　*

ஒருவனின் வீட்டிலே இரவு தங்கும்படி அந்நியன் ஒருவன் சென்றான். பிறகு நடுச்சாமத்தில் எழுந்தான். அவனால் நித்திரை செய்ய முடியவில்லை. ஆதலின் கடவுளைத்தூஷிக்கத் தொடங்கினான். அவன் வாயிலிருந்து வந்த கெட்ட வார்த்தைகளைக் கேட்டு வீட்டுக்காரன் எழுந்து, அவனைத் தன் இல்லத்தினின்று துரத்தி விட்டான். மறுநாட்காலை ஒரு தேவதூதன் வீட்டின் சொந்தக்காரனுக்குத் தோன்றி, "இரவுதங்கும்படி ஓர் அந்நியனை நான் உன்னிடம் அனுப்பினேனே; அவன் எங்கே?" என்றார். "அவன் கடவுளைத் தூஷித்தமையால் விரட்டிவிட்டேன்" என்று அவன் பதிலளித்ததும், சம்மனசானவர்: "நாற்பது வருடங்களாகக் கடவுள் அவனுடன் பொறுமையாயிருந்திருக்கிறார்; நீ ஒரு நாள் அவனைச் சகிக்க முடியவில்லையே" என்று சொல்லிப்போனார்.

### நன்றியறிந்த தோத்திரம்

திரு இருதய ஆண்டவரின் தயவால் எனது ஆபத்தான வருத்தத்திலும், பல இக்கட்டுகளிலும் காப்பாற்றியதற்காக நேசம்நிறைந்த திருஇருதய ஆண்டவருக்கு என்றும்தோத்திரமாக நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் B. S. T.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 3-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org